# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்:5 | இதழ்: 8 | மே : 2021 | ரூ.10/- | வருட சந்தா:ரூ.100/- |
| Volume:5 | Issue: 8 | May : 2021 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |




# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

கொரோனா இரண்டாவது அலையில் மனித இனம் அல்லல் பட்டுக்கொண்டுள்ளது. நமது சனாதன தர்மத்தில் இது போன்ற உற்பாதங்களின் போது இறைவனைத் துதித்து நிவர்த்தி பெற பல உபாயங்களை நம் முன்னோர்களான ரிஷிகளும் முனிவர்களும் சித்தர்களும் வழங்கியுள்ளனர். அவற்றில் குறிப்பிட்ட உபாயங்களை தற்கால ஸ்ரீ குருமார்கள் தேர்வு செய்து மக்களுக்கு தெரியப்படுத்தி வழி நடத்துகின்றனர்.

அந்த வகையில் ச்ருங்கேரி சாரதா பீடாதிபதிகள் "நம:சங்கராய" என்ற மந்திரத்தை ஒவ்வொரு நாளும் 1000 தடவை ஜபம் செய்ய அறிவுருத்தியுள்ளனர்.

சென்னை ஸ்ரீ மஹா மேரு மண்டலியின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் லோகக்ஷேமத்திற்காக கீழ்க்கண்ட பாராயணங்களை தினந்தோரும் பாராயணம் செய்து இந்த குழுமத்தில் பதிவிடுமாறு அறிவுருத்தியுள்ளார்கள்.

1. ஓம் நம : சங்கராய (ஒரு மணி நேர ஜபம்)
2. ராகவ யாதவீயம் (ஒரு முறை)
3. ச்யாமளா தண்டகம் (ஒரு முறை)
4. ஸ்ரீ சாகம்பரி ஸஹஸ்ரநாமம் (ஒரு முறை)
5. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (ஒரு முறை)

ஸ்ரீராகவ யாதவீயமும் ஸ்ரீ ச்யாமளா தண்டகமும் மண்டலியால் வழங்கப்பட உள்ளது.

அதுவரை ஏனைய ஜபத்தையும் பாராயணங்களையும் இன்று முதல் தொடர்ந்து செய்யுமாறு ஸ்ரீ மஹா மேரு மண்டலி அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

லோகக்ஷேமத்திற்கான நம் பங்கை ஆற்றுவோம் வாருங்கள்.

ஸ்ரீ மஹா மேரு மண்டலி.

மேலும் விபரங்களுக்கு :

**ஸ்ரீமதி இந்திரா பாலாஜி, 94440 60346**

# வேதபாரதி
## செய்திகள்



காயத்ரீ தேவி

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 20

**நாயமாத்மா ப$^{3}$லஹீனேன லப்$^{4}$ய:**
**ந ச ப்ரமாதா$^{3}$த்தபஸோ வாப்யலிங்கா$^{3}$த்**
**(முண்டகோபநிஷதம் – 3-2-4)**

**பொருள் :**

*ந – அடையப் படுவதில்லை*

*அயம் ஆத்மா – இந்த ஆத்மா, பலஹீனேன – வலிமை இல்லாததனால், ந லப்$^{4}$ய – அடையப்படுவதில்லை.*

*ப்ரமாதாத் ச– கவனக் குறைவுடன் இருப்பதாலும்*

**கருத்து :**

*இந்த ஆத்மா பலம் குறைந்தவனால், கவனக்குறைவு இருப்பவனால் அடையப்படுவதில்லை. துறவற்ற ஞானத்தாலும் அடையப்படுவதில்லை.*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 5 இதழ்: 8

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு.. | 5 |
| வைகாசி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 10 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 14 |
| சாந்தா அத்தை | 17 |
| நாலடியார் | 19 |
| ஸ்ரீமத் பாகவதம் | 20 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 27 |
| மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 29 |
| தர்மத்தின் குரல் | 31 |
| பாரத தேசப் புனித யாத்ரை | 32 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 34 |
| சாதனைப் பறவைகள் | 35 |
| பசு சர்வரோக நிவாரணி | 38 |
| பதினெண் புராணங்கள் | 40 |
| புரோஹிதர் | 44 |

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய
சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

# ஒரு நிமிடம் உங்களோடு.....

## "நட்பு"

**"நட்பு", "சினேகம்", "தோழமை",** *என்பது இருவரிடையே ஏற்படும் ஓர் உறவு இரண்டு மனங்களும் ஒன்றோடு ஒன்று நெருங்கும்போது ஏற்படுவது "நட்பு" புரிந்து கொள்ளுதலையும், அனுசரித்தலையும் அடிப்படையாகக் கொண்டதுதான் "நட்பு". இதற்கு இனம், நாடு என எந்த எல்லைகளும் கிடையாது. நட்பின் இலக்கணம் என்ன?, யாரிடம் நாம் நட்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை எல்லாம் நம்முடைய இதிகாசங்களும், புராணங்களும் விளக்குகின்றன.*

*பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும், குசேலரும் சிறு வயதில் பாடசாலையில் ஒன்றாக படித்தார்கள். அதன் பிறகு இருவரும் பார்த்துக்கொண்டதே கிடையாது. இருப்பினும் அவர்கள் நண்பர்களாகத்தான் இருந்தார்கள். வறுமையின் காரணமாக குசேலர் தன் நண்பன் ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்க்கச் சென்றபோது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் குசேலரை எதிர்கொண்டு அழைத்து உபசரித்தது, உயர்ந்த நட்பிற்கு அடையாளமாக இருந்தது.*

*மஹாபாரதத்தில் துரியோதனனுக்கும், கர்ணனுக்கும் நட்பு திடீரென்று ஏற்பட்டது. ஆனால் கடைசியில் அவர்கள் இருவரின் மரணத்திற்கும் அந்த நட்பே காரணமாகிவிட்டது.*

*பாண்டிய நாட்டில் பிறந்தவர்* **"பிசிராந்தையார்"**. *இவர் சங்ககால புலவர்களில் ஒருவர். இவரும் சோழ மன்னன் கோப்பெரும்சோழனும் கடைசிவரையில் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளாமலே நண்பர்களாக இருந்தார்கள்.*

*வள்ளுவர் நட்பிற்காக,* **"நட்பு"** *என்றஅதிகாரத்தில் பத்து குறள்களை எழுதியுள்ளார். அதில் நட்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு, வள்ளுவர் கூறுகிறார்.*

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு. (குறள் 788)**

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு. (குறள் 786)**

**நட்பு உயிரைக் கொடுக்கவும், உயிரைக் காப்பாற்றவும் தயாராக இருக்க வேண்டும்.**

**கொண்டுவந்தால் தந்தை**
**கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய்**
**சீர் கொண்டுவந்தால் சகோதரி**
**கொலையும் செய்வாள் பத்தினி**
**உயிர் காப்பான் தோழன்**

*உண்மையான நண்பர்களுக்கிடையே ரகசியங்கள் கிடையாது. அதனால்தான் அபிராம பட்டர் அம்பிகையிடம் “ஓர் கபடு வாரா நட்பு வேண்டும்” என்று வேண்டினார்.*

*சூர்ய உதயத்தில் நம்முடைய நிழல் நீண்டு இருக்கும். அதன் பிறகு நிழல் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து உச்சி வேளையில் அந்த நிழல் நம்மீதே விழும். அதன்பிறகு மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து மாலையில் சூரியன் மறையும்போது நம் நிழல் நீண்டிருக்கும். இதுபோல் முதலில் திடீர் என்று பெரியதாக வளரும் நட்பு போக போக குறுகிபோய்விடும். ஆனால் சிறுக சிறுக வளரும் நட்பு உண்மையான, உறுதியான, நிரந்தரமான நட்பாக இருக்கும். நட்பை நம்பி ஏமாற்றம் அடைவது இந்த காலத்தில் மிகவும் அதிகம்.*

*நட்பு நல்லவனை கெட்டவனாகவும், கெட்டவனை நல்லவனாகவும் மாற்றும். அதனால் நட்பின் இலக்கணத்தைப் புரிந்து கொண்டு வாழவேண்டும். அந்த நட்புதான் நமக்கு உதவி புரியும். குழந்தைகளுக்கு இதை சொல்லிக்கொடுக்க வேண்டும்.*

**டி. சூரியநாராயணன்**

STAR Health Insurance
The Health Insurance Specialist





**மருத்துவ பாலிசி உங்களை**
**செல்வந்தராக்காது**
**ஆனால்**
**உங்கள் குடும்பத்தை**
**கடனாளியாக்காமல் பாதுகாக்கும்!!!**
**மருத்துவமனை வரவேற்பறையில்**
**சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள்**
**ஏன் மருத்துவ பாலிசி**
**எடுக்க வேண்டும் என்பதற்கு**
**பதில் கிடைக்கும்.**

**S. Narayanan - 9360277372**

# ப்லவ வருஷம் - வைகாசி மாத விசேஷங்கள்

## (மே 15.05.2021 முதல் ஜுன் 14.06.2021 வரை)

| | | | |
|---|---|---|---|
| *16.05.2021* | வை *2* | ஞாயிறு | வைகாசி விசாக உற்சவம் ஆரம்பம் |
| *17.05.2021* | வை *3* | திங்கள் | ஸ்ரீ ஆதி சங்கர ஜெயந்தி |
| *18.05.2021* | வை *4* | செவ்வாய் | சஷ்டி |
| *21.05.2021* | வை *7* | வெள்ளி | ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் ஆராதனை |
| *22.05.2021* | வை *8* | சனி | ஏகாதசி |
| *25.05.2021* | வை *11* | செவ்வாய் | பௌர்ணமி, ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி |
| *26.05.2021* | வை *12* | புதன் | ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா ஜெயந்தி |
| *28.05.2021* | வை *14* | வெள்ளி | அக்னி நக்ஷத்ர நிவர்த்தி |
| *30.05.2021* | வை *16* | ஞாயிறு | சதுர்த்தி |
| *01.06.2021* | வை *18* | செவ்வாய் | சஷ்டி |
| *06.06.2021* | வை *23* | ஞாயிறு | ஏகாதசி |
| *10.06.2021* | வை *27* | வியாழன் | அமாவாஸை |
| *14.06.2021* | வை *31* | திங்கள் | சதுர்த்தி |

## 10.06.2021 வியாழக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ ப்லவநாம ஸம்வத்ஸரே உத்தராயணே வஸந்த ருதௌ ருஷப மாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ குரு வாஸர: யுக்தாயாம் ரோஹிணீ நக்ஷத்ர யுக்தாயாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ அமாவாஸ்யா புண்யகாலே தர்ஸ ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**



**01.05.2021 சனிக்கிழமை ஸ்ரீ வராஹ ஜயந்தி :**

**“ஹிரண்யாக்ஷகன்”** பூமியை கடலுக்கடியில் கொண்டு வைத்தபோது பகவான் **ஸ்ரீவராஹ** அவதாரம் எடுத்து பூமியை மீட்டார். இந்த ஸ்ரீவராஹ அவதார மூர்த்தியை பிரார்த்தனை செய்பவர்களுக்கும், அவர் சரித்திரத்தை பக்தியுடன் படித்து அவரை தியானம் செய்பவர்களுக்கும் சகல சம்பத்தும், தீர்க்க ஆயுளும் கிடைக்கும்.




**09.05.2021 ஞாயிறு – ஸ்ரீ மத்ஸ்ய ஜயந்தி :**

“சோமுகாசுரன்” என்றஅசுரன் வேதங்களை அபகரித்துக்கொண்டு போய் கடலில் ஒளித்துவைத்த போது பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணு மீனாக அவதாரம் எடுத்து “சோமுகாசுரனை வதம் செய்து வேதங்களை மீட்டுவந்தார். பகவான் எடுத்த முதல் அவதாரம் இது. இன்றைய தினம் மத்ஸ்ய ரூபியான பகவானை பூஜை செய்து ப்ரார்த்தித்துக் கொண்டால் நமக்கு ஏற்பட்ட சாபங்களும், தோஷங்களும் நீங்கி, உயர்வு ஏற்படும்.



**12.05.2021 புதன் – ஸ்ரீ ஸ்யாமா ஸாஸ்திரிகள் ஜயந்தி**

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர். இவர் 1762 – 1827 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்தவர். தேவி கீர்த்தனங்களைப் பாடியுள்ளார். சித்திரை மாதம் க்ருத்திகை நக்ஷத்திரமான இன்று இவருடைய கீர்த்தனங்களைப் பாடி பகவானை தியானிப்போம்.



**14.05.2021 வெள்ளி – ஸ்ரீ பரசுராம ஜயந்தி**

இந்த அவதாரம் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் 6வது அவதாரமாகும். இவர் ஜமதக்னி என்றமுனிவருக்கும் ரேணுகா தேவிக்கும், வைசாக மாத சுக்லபக்ஷ த்ருதீயை இரவின் முதல் யாமத்தில் பிறந்தார். கடும் தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து “பரசு” என்ற கோடாலியைப் பெற்றதால் இவர் “பரசுராமர்” என்று அழைக்கப்பட்டார். இவருடைய ஜயந்தி தினத்தில் இவரை பூஜித்தால் தவறை எதிர்த்து போராடும் துணிவும், நல்ல உடல் வலிமையும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹமும் கிடைக்கும்.



**14.05.2021 வெள்ளி ஸ்ரீராஜமாதங்கீ ஜயந்தி :**

ஸ்ரீ மஹாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்கள் போல் ஸ்ரீ அம்பாளும் பத்து அவதாரங்கள் எடுத்தாள். அதுதான் **“தசமஹாவித்யா’’** அவதாரங்கள். அதில் ஒன்பதாவது அவதாரம்தான் **“மாதங்கீ’’.** மாதங்க முனிவரின் தவத்திற்கு மகிழ்ந்து அவருக்கு மகளாக அவதரித்ததால் **“மாதங்கீ”** என பெயர் பெற்றாள். இந்த தேவி ரத்னமயமான சிம்மாசனத்தில், கருமை நிறத்துடன், சிவப்பு வஸ்த்ரம் உடுத்தி, தனது வலது காலை தாமரையின் மீது வைத்துக் கொண்டு, சிரஸில் சந்திரனை தரித்துக்கொண்டு, **“கல்ஹாரபுஷ்ப”** மாலையுடன், **“வல்லகீ”** என்னும் வீணையை வாசித்துக்கொண்டு, இன்முகத்துடன் காட்க்ஷி தருகிறாள், 14.05.2021 வெள்ளிக்கிழமை “மாதங்கீ” தேவியை ரோஜா புஷ்பத்தால் அர்ச்சனை செய்து, தேன் கலந்த பால் பாயஸம் நிவேதனம் செய்தால் ஐஸ்வர்யம், படிப்பு, ஸங்கீதம், வஸ்யம் ஆகிய நான்கு விதமான பலன்களும் ஏற்படும்.



**25.05.2021 செவ்வாய் ஸ்ரீ நரஸிஹ்ம ஜயந்தி :**

ஸ்ரீமத் பாகவதத்தில் ஏழாவது ஸ்கந்தத்தில் உள்ள “பிரஹ்லாத சரித்திரம்’’ மிகவும் விசேஷமானது. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் மிகவும் விசேஷமானது ஸ்ரீநரஸிஹ்ம அவதாரம். வைகாசி சுக்லபட்ச சதுர்தசி, ஸ்வாதி நட்க்ஷத்திரத்தில் மஹா பிரதோஷ வேளையில், கழுத்துக்கு மேல் ஸிம்ஹ வடிவமாகவும், கழுத்துக்கு கீழ் மனித வடிவமாகவும் ஹிரண்யகசிபுசை வதம் செய்ய ஸ்ரீமஹாவிஷ்ணு ஸ்ரீநரஸிஹ்ம மூர்த்தியாக அவதாரம் செய்த நாள்தான் “ஸ்ரீநரஸிஹ்ம ஜயந்தி”.

25.05.2021 – செவ்வாய் கிழமை “ஸ்ரீநரஸிஹ்ம ஜயந்தி” அன்று பகலில் விரதம் இருந்து மாலையில் ப்ரஹ்லாத சரித்திரம் பாராயணம் செய்து, பானகம் நிவேதனம் செய்து ஸ்ரீநரஸிஹ்ம மூர்த்திக்கு பூஜை செய்தால் எல்லா பாபங்களும் நீங்கி மனோ தைரியமும் ஞானமும், வெற்றியும் கிடைக்கும்.

# அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ ஆதிசங்கரர் ஜெயந்தி

## 17.05.2021 - திங்கள்

**யதா யதா ஹி த$^4$ர்மஸ்ய க்$^3$லாநிர்ப$^4$வதி பாரத/**
**அப்$^4$யுத்தாநமத$^4$ர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்//**

**(கீதை 4-7)**

**பரித்ராணாய ஸாதூ$^4$னாம் விநாசய ச து$^3$ஷ்க்ருதாம்/**
**த$^4$ர்மஸம்ஸ்தா$^2$பநார்த்தா$^2$ய ஸம்ப$^4$வாமி யுகே$^3$ யுகே$^3$**

**(கீதை 4-8)**

*"எப்போதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்குகிறதோ, அப்போதெல்லாம் நான் என்னைப் பிறப்பித்துக்கொண்டு நல்லாரைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் யுகம்தோறும் அவதரிப்பேன்" என்கிறார் பகவான்.*

*ஸ்ரீமத் பாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில் 3வது அத்தியாயத்தில் ஸ்லோகங்கள் 6 முதல் 25 வரையிலும் பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணு எடுத்த பல அவதாரங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. சிவன் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் எடுப்பதில்லை. நம்முடைய கடவுள்களின் அவதாரங்கள் எல்லாம் பல அசுரர்களையும் தீயவர்களையும் வதம் செய்வதற்காக அவதரித்தவை. ஆனால் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் ஞான மார்க்கம் குறைந்து வேதங்களுக்கு குந்தகம் ஏற்பட்டு 70க்கும் மேற்பட்ட மதங்கள் ஒருவருக்கு ஒருவர் நான்தான் பெரியவன், நான்தான் பெரியவன் என்று சண்டை போட்டுக்கொண்டு தவறான சித்தாந்தங்களைப் பரப்பி மக்களை திசை திருப்பும் முயற்சிகள் நடைபெற்றபோது கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியதுபோல் "சம்பவாமி யுகே யுகே" விற்கு அவசியமும் அவசரமும் ஏற்பட்டது. அப்போது* **"அக்ஞானம்"** *என்ற அரக்கனை அழித்து, துன்புறும் மக்களுக்கு ஆத்மவித்தையை அளித்து உய்விக்கும் பொருட்டு ஸ்ரீ பரேமேஸ்வரனின் அங்கமான ஸாக்ஷாத் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியே ஆதி சங்கரராக இந்த பூமியில் அவதரித்தார்.*

*கேரளத்தில்* **"காலடி"** *என்னும் சிறிய கிராமத்தில் பிறந்து*

*32 ஆண்டு ஆயுட்காலத்தில் பாரதத்தில் குமரி முதல் இமயம் வரை மூன்று முறை கால் நடையாகவே வலம் வந்து ஜனங்களுக்கு ஸநாதன தர்மத்தின் பெருமைகளையும், அத்வைத ஞானத்தையும்* **“தர்மம்’’** *என்றால் என்ன என்பதையும் மக்களுக்கு விளக்கி, அவர்களை வேதநெறியில் செல்லவைத்தார். ஒளியிழந்திருந்த ஸநாதன தர்மத்தை மீண்டும் ஜ்வலிக்கச் செய்தார். ஆதிசங்கரர் இந்த பாரத பூமியில் அவதாரம் செய்யவில்லை என்றால் ஸநாதன தர்மம் மிக மிக க்ஷீணமாகப் போயிருக்கும்.* **“ஆதி சங்கரர்’’** *என்றபெயரே* **“ஸநாதன தர்மம்’’** *என்பதற்கு மறு பெயர் ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் “கணேச பஞ்சரத்னத்தில்’’ ஆரம்பித்து அநேக* **பஞ்சரத்னங்கள், அஷ்டகங்கள், புஜங்கங்கள், ஸ்தோத்ரங்கள்,** *ஸ்துதிகள் இயற்றியுள்ளார்.*

**(இவற்றின் முழு விவரம் அடுத்த மாத இதழில் வெளியாகும்).** *பத்து உபநிஷத்துகள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை, ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமம், ஆகியவற்றுக்கு பாஷ்யம் எழுதியுள்ளார். இவை இல்லாமல்* **விவேக சூடாமணி, சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி, ஆனந்த லஹரி, ப்ரச்னோத்ர ரத்னமாலிகா** *ஆகியவற்றை இயற்றியுள்ளார். பாரதம் பூராவும் உள்ள எந்த கோயிலுக்குப் போனாலும் அங்கு ஆதி சங்கரர் விஜயம் செய்து ஒரு ஸ்தோத்ரம் எழுதியிருப்பது தெரியவரும்.*

*ஸ்ரீ ஆதிசங்கரர் தன் அவதாரம் பூர்த்தியாகும் காலத்தில் தன் சீடர்களுக்கு சில உபதேசங்களைச் செய்துள்ளார். இந்த உபதேசங்கள்* **“சோபான பஞ்சகம்’’** *என்ற ஐந்து ஸ்லோகங்களாக அமைந்துள்ளது. இந்த உபதேசங்கள் எல்லாம் சீடர்களாகிய நம் எல்லோருக்கும் தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.*

**ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கரரின் ஞானோபதேசங்கள் :**

1. *நித்யம் வேதம் ஓது. அதன் விதிப்படி தர்மத்தைச் செய். வேதங்களின் முடிவான பொருளை அடைவதற்கு துணை செய்யும் நியாயமான காரணங்களை மட்டும் நன்கு ஆலோசி.*

2. *ஆத்ம ஞானி ஒருவரை குருவாக நாடி அவரது திருவடித் தொண்டை மேற்கொள். அவரிடம் உபதேசங்களை வேண்டிக்கொள். வேதங்களின் முடிவான பொருளை உரைக்கும் வாக்கியங்களைக் கேட்டு தெரிந்துக்கொள்.*

3. உலகப்பற்றைஊட்டும் இன்பங்கள் எல்லாம் முடிவில் துன்பங்களாகவே முடியும் என்பதை மறவாதே.

4. உன்னை நீ அறிவதில் ஆர்வம் கொள். தன்னலப்பற்றிலிருந்து உன்னை மீட்டுக்கொள். நல்லவர்களிடம் உறவுகொள். பகவானிடம் மறவாத அன்பு வை.

5. புலன்கள் அடக்குதல் போன்ற உத்தம குணங்களை பழகிக்கொள்.

6. உணர்ச்சி, வெறி, கோபம், பற்று, பேராசை இவற்றையெல்லாம் துறந்து உன் உண்மையான தன்மையைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்.

7. வீண் தர்க்க வாதங்களில் ஈடுபடாதே. பயன் இல்லாத வார்த்தைகளைச் சொல்லாதே. பேசும்போது ஜாக்கிரதையாகப் பேசு.

8. "நான் படித்தவன் எனக்கு எல்லாம் தெரியும்" என்ற கர்வத்தை அறவே ஒழித்துவிடு. படித்தவர்களிடம் வாதம் செய்யாதே.

9. உலகத்தாரின் போற்றுதல், தூற்றுதல் ஆகியவற்றை மனதில் வாங்கிக்கொள்ளாதே, ஏகாதந்தத்தையே நாடு.

10. ருசி உள்ள உணவைத் தேடி அலையாதே. தெய்வாதீனமாக தானாகக் கிடைத்ததைக் கொண்டு மகிழ்ச்சி அடை.

11. செல்வத்தாலும், சுற்றத்தாலும், இளமையாலும் கர்வம் கொள்ளாதே என்றைக்காவது ஒரு நாள் இவை எல்லாம் உன்னை விட்டு விலகிச் சென்றுவிடும். அதனால் வாழ்நாளுக்குள் கடவுளை அறிய முற்படு.

12. அனைத்து சாஸ்திரங்களும், வேத நூல்களும் மனதை அடக்கும் வழிமுறைகளையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. மனதை அடக்கும் சக்தியை கடவுளிடம் கேட்டுப் பெறவேண்டும்.

13. காய்ந்த எலும்புத் துண்டைக் கடித்த நாய் தன் வாயிலிருந்து வழியும் ரத்தத்தை, அந்த எலும்பிலிருந்து வருவதாக எண்ணி மேலும் மேலும் அழுத்தமாக கடித்து துன்பத்தை அடையும். அதுபோல் மனிதனும் ஆசைகளைப் பெருக்கிக் கொண்டு துன்பத்தை அனுபவிக்கிறான்.

14. மனிதப் பிறவி, ஞானத்தில் நாட்டம், மகான்களின் தொடர்பு இவை மூன்றும் கிடைப்பது அரிது. தெய்வத்தின் அருள் இருந்தால் மட்டுமே இவை ஒருவனுக்குக் கிடைக்கின்றன.

15. *பகவத் கீதையைச் சிறிதாவது படிப்பவன், கங்கை நீரை ஒரு துளியாவது பருகியவன், பகவானுக்கு ஒரு முறையாவது பூஜை செய்பவன், இப்படிப்பட்டவனுக்கு எம பயம் கிடையாது.*

16. *பொருள் தேடும்வரை சுற்றத்தார் நம் மீது அன்பு வைத்திருப்பார்கள். நோயினால் தளர்ந்துபோன பின் யாரும் நம்மைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.*

17. *நெருப்பிலிட்ட தங்கம் அழுக்கு நீங்கி பிரகாசிப்பது போல் ஒரு குருவிடம் உபதேசம் கற்றால் மனமும் அழுக்குகள் நீங்கப்பெற்று ஒளியுடன் பிரகாசிக்கும்.*

18. *பகலும், இரவும், காலையும், மாலையும் என பருவங்கள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு காலம் விளையாடுகிறது. வயது கழிகிறது, ஆனால் ஆசை மட்டும் மனிதனை விடுவதில்லை.*

19. *தானம், தர்மம், கடமையை புரிதல், பகவந்நாமாக்களை உச்சரித்தல், திருக்கோயில்களை தரிசித்தல் ஆகிய நல்ல செயல்கள் பாவம் தொலைக்கும் வழிகளாகும்.*

20. *வாழ்வில் நாம் படும் துன்பங்களுக்கும், இன்னல்களுக்கும் அடிப்படை காரணம், நான் வேறு, நீ வேறு என்ற இரட்டை மனோபாவம்தான். மனதில் சுயநலம் இருக்கும் வரை துன்பத்திலிருந்து விலக முடியாது. சுய நலம் உள்ள இடத்தில் என்றும் அனுமதி இருப்பதில்லை.*

*ஸ்ரீராமர் வாழ்ந்து காட்டியதுபோல் வாழவேண்டும், ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் கூறியதுபோல் நடக்க வேண்டும் என்று சொல்லுவார்கள், அதேபோல் நாம் ஒவ்வொருவரும் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்களின் அவதார தினமான வைகாசி சுக்ல பஞ்சமி நாளை கொண்டாடி அவருடைய ஸ்தோத்ரங்களை தினமும் பாராயணம் செய்து, அவர் கூறியுள்ள மேற்கண்ட உயர்ந்த தத்துவங்களின்படி வாழ்ந்தால் நமக்கு பக்தியும் ஞானமும் வரும்.*

*ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் காட்டிய அருட்பாதையில் செல்வோமாக.*

*ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர*

*ஸ்ரீ ஆதி சங்கர ஜயந்தீ 17.05.2021 திங்கள்கிழமை*


*தொகுப்பு :* **டி. சூரியநாராயணன்.**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,

ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 25



## அத்தியாயம் – 2

## ஸாங்கிய யோகம்

**யம் ஹி ந வ்யத$^{2}$யந்த்யேதே புருஷம் புருஷர்ஷப$^{4}$**
**ஸமது$^{3}$க்க$^{2}$ ஸுக$^{2}$ம் தீ$^{4}$ரம் ஸோம்ருதத்வாய**
**கல்பதே**

**(கீதை 2-15)**

**பொருள் :** *புருஷ ஸ்ரேஷ்டனே எவன் இவற்றால் இன்னலுறான், இன்பங்களை ஒப்பாக உணர்கிறான், அந்த தீரனே சாகா நிலைக்குத் தகுந்தவனாகிறான்.*

*பகவான் அர்ஜுனனை* **"புருஷர்களில் ஸ்ரேஷ்டனே"** *என்று அழைக்கிறார். அப்படி அழைத்து அர்ஜுனனைப் பார்த்து* **"நவ்யதயந்த்யேதே''** *துக்கப்படாதவர்களுக்கும், கவலைப்படாதவர்களுக்கும் சுகமும், துக்கமும் சமமாகத் தோன்றும். அவர்கள்* **"தீரன்மார்".** *அதாவது சுகம் வரும்போது இந்த சுகம் நிலையாக இருக்கும் என்று அவர்கள் மனதில் நினைக்க மாட்டார்கள். துக்கம் வரும்போது இந்த துக்கம் எப்போதும் என்னுடன் இருக்கும் என்றும் நினைக்கமாட்டார்கள். என்றும் நம்மைப் பார்க்கும் போதெல்லாம் சிரிக்கும் ஒருவர் ஒரு நாள் நம்மைப் பார்த்ததும் சிரிக்கவில்லையானால், மறுநாள் நாம் அவரைப் பார்க்க நேரிட்டால் நாம் அவரைப் பார்த்து சிரிக்க வேண்டுமா, வேண்டாமா என்று நினைப்போம். அதனால் சுகத்தையும், துக்கத்தையும் சமமாக பார்க்க வேண்டும். அப்படி சுகத்தையும், துக்கத்தையும் சமமாக பாவிப்பவர்கள்* **"அம்ருதத்வாய கல்பதே"** *சாகா நிலைக்கு தகுதியுடையவர்களாகிறார்கள்.*

**நாஸதோ வித்$^{3}$யதே பாவோ நாபா$^{4}$வோ வித்யதே ஸத:**
**உப$^{4}$யோரபி த்$^{3}$ருஷ்டோந்தஸ் த்வனயோஸ்தத்த்வத$^{3}$ர்சஸிபி**

**(கீதை 2:16)**

*எது இல்லாததோ, அது உண்மையாகாது. எது உள்ளதோ, அது இல்லாததாகாது. உண்மை அறிந்தவர்கள், இந்த இரண்டிற்கும் உள்ள வேற்றுமை உணர்வார்கள்.*

*இந்த ஸ்லோகம் மிக மிக முக்கியமானது. மனப்பாடம் செய்ய வேண்டியது. இன்றைய விஞ்ஞானம் இதில் விளங்கும், சுமார் 5000 வருடங்களுக்கு முன்னே நமக்கு விஞ்ஞானத்தை பகவான் ஸ்ரீகிருஷ்ணர் சொல்லிகொடுத்திருக்கிறார். இந்த ஸ்லோகத்தில் பகவான் இரண்டு சொல்லை உபயோகிக்கிறார்.* **“ஸத், அஸத்”, “ந அஸத்து வித்யதே ஸத்பாவா” = அஸத்து ஸத்தாகாகது. அடுத்து “ந அபாவோ வித்யதே ஸத”** = *ஸத்து அஸத்தாகாது.* Absence will never become presence and presence will never become absence. *இதுதான் விஞ்ஞானத்தின் கூற்று* Absence will never become presence *என்றால்* which is not there will never come. *இந்த பிரபஞ்சத்தில் உள்ளது எல்லாம் முன்பே உள்ளதாகத்தான் இருக்க வேண்டும்.* Albert Einstein *என்ற விஞ்ஞானி* The whole universe is involved from Infinite energy $E=mc^2$ *என்று கண்டுபிடித்து கூறினார்.* Energy *யின்* existence *லிருந்து* Energy *யின் “சத்” வருகிறது. எது ஆகவேண்டுமோ அது முதலிலேயே உண்டாயிருக்க வேண்டும். பகவான் கிருஷ்ணன் கூறியது “இல்லாதது ஒருபோதும் உண்டாவதில்லை, உள்ளது ஒருபோதும் இல்லாமல் ஆகாது”.*

*நமக்கு முன் ஜென்மம் பற்றி ஏதும் தெரியாது. நாம் யாராக இருந்தோம்? நம்முடைய தந்தை யார்? தாய் யார்? எங்கே பிறந்தோம் என்பது எதுவும் தெரியாது. ஆனால் ஞாபகம் இல்லை என்று கூறமுடியாது. காரணம் முன் ஜென்ம ஸ்மரணைகள் இந்த ஜென்மத்தில் நம்மை அறியாமல் வெளிப்படுகிறது. நாம் எங்காவது ஒரு இடத்திற்குப் போய்விட்டு வந்தால், அங்கு பார்த்தது எல்லாம் ஞாபகத்தில் இருக்காது. மனதில் பதிந்திருக்காது. ஆனால் எதை மிகவும் விரும்பி ஆர்வமாக, ஆழ்ந்து பார்த்தோமோ அது மட்டும் நம்முடைய மனதில் பதிந்து பின் ஞாபத்தில் வரும். சில சமயம் அவை நம் கனவில் வரும். ஆனால் அந்த கனவில் முதலில் ஒரு கல்யாணத்திற்குப் போவதுபோல் வரும். அடுத்து பக்கத்தில் ஒரு பிணம் இருப்பதுபோல் இருக்கும். இரண்டிற்கும் ஒரு*

தொடர்பும் இருக்காது. ஆனால் அவை அனைத்தும் முன்பு எப்போதாவது நாம் ஆழ்ந்து பார்த்து நம் மனதில் பதிந்தவைகளாகத்தான் இருக்கும்.

மூன்று வயதான, சங்கீதம் படிக்காத ஒரு குழந்தை அழகாக பாடும். அதை நாம் ஜென்ம வாசனை என்போம். சில குழந்தைகள் மெக்கானிசம் செய்யும். அதைப்பார்த்து எல்லோரும் இவன் பெரிய என்ஜினியர் ஆகப்போகிறான் என்று கூறுவார்கள். அந்த குழந்தைக்கு 3 வயதில் இந்த ஆற்றல் எங்கிருந்து வந்தது? அதாவது Anything manifest must exist. உள்ளது மட்டுமே தோன்றவேண்டும். ஸ்ரீஆதி சங்கரர் கூறியதுபோல் “மண் இருந்தால்தான் மண் குடம் உண்டாக்க முடியும். தங்கம் இருந்தால் மட்டுமே தங்க நகைகள் உண்டாக்க முடியும். பால் இருந்தால்தான் வெண்ணை உண்டாக்கமுடியும்” நாம் அணியும் நகைகள் முதலிலேயே பூமியில் தங்கமாக புதைந்திருந்ததுதான். நாம் உடுத்தும் துணி முன்பே பருத்தியாக பூமியிலிருந்து செடியிலிருந்து உண்டான நூலினால் செய்யப்பட்டதுதான்.

இன்று நாம் எந்த மனதோடு இருக்கிறோமோ, நாளை அதுதான் வெளிப்படும். நம்முடைய வருங்காலம் நிச்சயிக்கப்படுவது இந்த நிகழ்காலத்தில்தான். அதனால் நிகழ்காலத்தில் நம் மனதை நல்லதாக வைக்கவேண்டியது நம்முடைய கையில்தான் இருக்கிறது. இதைத்தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மேலே கண்ட 16வது ஸ்லோகத்தில் சொல்லுகிறார்.

தொடரும்....

**14.04.2021 ஊரப்பாக்கம் பஞ்சாங்கபடணம் நிகழ்ச்சி**





# சாந்தா அத்தை

முப்பது நபர்கள் கூடியிருந்த திருமண மண்டபத்தில் மாப்பிள்ளையும், மணப்பெண்ணும் மஞ்சள் தேங்காயை உருட்டிக்கொண்டிருந்தனர்.

"இந்த நிகழ்ச்சியை நலங்குனு சொல்வோம் இல்லையா, ரஞ்சனி" என்றாள் கவிதா. "ஆமா கவி, எங்க முறை திருமண வைபவத்தில் ரொம்ப அழகான ஈவன்ட் இது" என்றாள் ரஞ்சனி. மண்டபத்தில் நடுநாயகமாக அமர்ந்து கொண்டு அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டும் என கூறிக் கொண்டே, கிண்டல், கேலி எல்லாம் செய்து, வெகு சுவாரஸ்யமாக நடத்திக் கொண்டிருந்தார் ஒரு 70 வயது மதிக்கத்தக்க பெண்மணி.

"யார் ரஞ்சனி அது, உங்க அத்தை தானே? முன்னாடி பார்த்த ஞாபகம் இருக்கு". "ஆமா, சாந்தா அத்தை, என் அப்பாவோட பெரிய அக்கா, இப்போ என் தம்பி கல்யாணத்தோட முழு ஏற்பாடும் அவங்க தலைமையில தான்" என்றாள் ரஞ்சனி.

அரங்கேறும் பாட்டையும், சிரிப்பையும் கவனித்துக் கொண்டே தோழிகள் உரையாட ஆரம்பித்தனர்.

"உங்க அத்தை அம்சமா இருக்காங்க, பெயருக்கு ஏற்றமாதிரி சாந்தமும் அதே சமயம் திருத்தமாவும், உற்சாகமாவும் இருக்கறதப் பார்த்தா அழகா இருக்கு".

"ஹா, ஹா ஆமா"

"நம்ம இப்படி பேசி எத்தனை வருஷம் இருக்கும்.

உன் தம்பி கல்யாணத்தை மிஸ் பண்ண கூடாதுனு 3 நாள் லீவ் போட்டு வந்தது அத்தனை சந்தோஷமாக இருக்கு".

"எனக்கு அதைவிட சந்தோஷம்" எனக் கூறினாள் ரஞ்சனி. பெண்கள் தன் சிறு வயது தோழிகளைக் கண்டு பேச ஆரம்பித்தவுடன், அவர்களுக்குள் ஏற்படும் மாற்றங்கள் காண்பவர்களுக்கே தங்கள் கடந்த காலத்தை நினைவு படுத்தும்.

"சரி 2 நாட்களாய் பார்க்கிறேன். உங்க அத்தைக்கு எல்லா விஷயமும் அத்துபடியா தெரியுதே. ஊஞ்சல் பாட்டு பாடறதும், கோலம் போடறதும், சிரிப்பும், கனிவும் அதோட அவங்க புடவை கலெக்ஷனும், பெரிய ஃபேன் ஆயிட்டேன் நான்".

"சரி தான், நீ அப்போ அவங்க சமச்சு சாப்டுபார்க்கணும். நாம காலேஜ் படிக்கும் போது கண்ணதாசன் கவிதை ஒன்னு சொல்லி பார்ப்போமே நினைவு இருக்கா?.

"கத்திரிக்காய் கூட்டு வச்சா கடவுளுக்கே பசி எடுக்கும் உண்ண ஒரு கை எடுத்தா உள் நாக்கில் நீர் இறங்கும் வெண்டைக்காய் பச்சடிக்கும் வெள்ளரிக்காய் தக்காளி கிண்டி

*விட்ட கீரைக்கும் கீழ் இறங்கும் தெய்வமெல்லாம்”*

*“அட எனக்கு நம்ம இதை இரசிச்சது நல்லா ஞாபகம் இருக்கு, அப்போ அவங்க சமச்சு சாப்படனும்னு சொல்ற”*

*“அத்தையோட எல்லை சமையல் குடும்பம்னு மட்டும் இல்லை. ஒரு* service organization (X) Treasurer *வேலை வேற பார்க்கறாங்க. கணக்குல புலி இத்தனைக்கும் படிச்சது பி.யூ.சி. எத்தனை பட்ஜெட் போட்டாலும், கடைசில காசை மிச்சம் பண்ணி கொடுப்பாங்க”*

*“ரொம்ப இன்டெரிஸ்டிங் கேரக்டரா இருக்காங்களே”*

*“இவங்களை மாதிரி குடும்பத்துக்கு ஒருத்தர் இருந்தா போதும்”. “கண்டிப்பா கவி, சின்ன வயசுல இருந்து தம்பி தங்கைகளை பொறுப்பா கவனிச்சுருக்காங்க, தன்னோட 20 வயதுகளிலேயே தன் கணவனை இழந்தவங்க, தனியா அவங்க அதுக்கப்புறம் சின்ன சின்ன வேலைகள் செஞ்சு, முன்னுக்கு வந்தவங்க. சோம்பலா இருந்து ஒரு நாள் நான் பார்த்ததில்லை. சொல்லப் போனா குடும்பத்துல என்ன ஃபங்ஷன் நடந்தாலும், கோவிலுக்கு செய்தது, குழந்தை பிறந்தா அந்த குடும்பத்தை கவனிக்கறதுனு எல்லாருக்கும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாம உதவியிருக்காங்க.*

*“70 வயசுலயும், அவங்களோட உற்சாகமும் அத்தையைப் பத்தி நீ சொல்ற விஷயங்களையும் கேட்கவே ரொம்ப* inspiring *ஆ இருக்கு.*

*“எனக்கு, இப்போ சமீபமாதான் இவங்களோட அருமை புரிய ஆரம்பிச்சிருக்கு. எல்லாத்தையும் விட யோசிச்சு பாரேன், குடும்பத்துக்குள்ள எவ்வளவு பிரச்சனைகள் வரும், அவங்க பொறுமையாவும், நேர்த்தியாவும் சமாளிக்கிற விதத்தை பார்த்து அசந்து போயிருக்கேன். மனசும் புண்படாம செய்ய வேண்டியதை கரெக்டா செஞ்சுட்டு நகர்ந்துவாங்க.*

**தனியா வாழுற அவங்களோட ஒவ்வொரு விடியலும் எதை எதிர்நோக்கி இருக்கும்னு பல நாள் யோசிச்சது உண்டு; இருந்தும் எந்த ஒரு சலிப்பையும், சுய பச்சாதாபத்தையும் வெளிக்காட்டி பார்த்ததில்லை.**

*‘‘சாந்தா அத்தையோட வாழ்க்கை மழை மாதிரி கொடுப்பதை மட்டுமே குணமெனக் கொண்டது. அந்த மழைச்சாரலில் முளைத்த சிறு செடிகள் நாங்க எல்லோரும் எனக் கூறினாள் ரஞ்சனி”.*

*உண்மையில் ஒவ்வொரு மனிதருக்கு பின்னும் அவர்கள் கடந்து வந்த கதை இருக்கும். சாந்தா அத்தையின் வாழ்க்கை பயணத்தைக் கேட்டு, அதனால் ஏற்படும் தாக்கத்தை உணர்ந்து சிந்திக்க ஆரம்பித்தாள் கவிதா.* **- வெ. சிவசங்கரி**

# நாலடியார்

## 3. அதிகாரம் = 3 "யாக்கை நிலையாமை"

*சென்றமாதம் 2ம் அதிகாரத்தில்* **"இளமை நிலையாமை"**, *அதாவது "இளமை" நிலையானது அல்ல என்று பார்த்தோம். இந்த மாதம் 3-ம் அதிகாரம்* **"யாக்கை நிலையாமை"** *என்பதைப் பார்ப்போம்.* **"யாக்கை"** *என்றால் = தேகம், அல்லது மேனி என்று பொருள். இந்த உடம்பு எலும்பு, தசை, தோல் முதலிய எட்டுவகையான தாதுக்களால் யாக்கப்பட்டது. அதனால் அது "யாக்கை" எனப்பட்டது. இந்த அதிகாரத்தில் மொத்தம் 10 பாடல்கள் உள்ளன. அவற்றில் 2 பாக்களைப் பார்ப்போம்.*

**மலைமிசைத் தோன்றும் மதியம் போல் யானைத்**
**தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்**
**துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட்ட டாரல்லால்**
**எஞ்சினார் இல்வுலகத் தில். (நா 21)**

**பொருள் :** *மலையின் உச்சியில் தோன்றுகின்றமுழு நிலாவைப்போல யானையின் தலையின்மீது குடையுடன் வீதி வலம் வரும் அரசரும் இந்த நிலத்தில் இறந்த மன்னர் என்று குறித்து இழித்து உரைக்கப்பட்டாரே அல்லாமல் இறவாமல் நின்றவர் இவ்வுலகத்தில் இல்லை.*

*இவ்வுலகத்தில் பிறந்த எல்லோரும் எத்தகையவராக இருந்தாலும் ஒரு நாள் இறந்துதான் ஆகவேண்டும். இருக்கும் போதே யாவருக்கும் அறஞ்செய்ய வேண்டும்.*

**யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றார் தாம்பெற்ற**
**யாக்கையா லாய பயன் கொள்க யாக்கை**
**மலைநாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே**
**நிலையாது நீத்து விடும். (நா 28)**

**பொருள் :** *உடம்பை உறுதியுடையதாக முன் செய்த நல்வினைப் பயனால் பெற்றவர், அதனால் ஆகும் பயனான நற்கார்யங்களைச் செய்வாராக! ஏனெனில் மலை மீது உலவும் மேகம்போல் காணப்பட்டு நிலை பெறாது இவ்வுடல் அழிந்துவிடும்.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பாகவதம்

பரிதி

பகுதி - 5



**யே மானவா பாபக்ருதஸ்து ஸர்வதா$^{3}$**
**ஸதா$^{3}$து$^{3}$ராசாரரதா விமார்க$^{3}$கா:/**
**குரோதா$^{4}$க்$^{3}$நி த$^{3}$க்$^{3}$தா குடிலாஸ்ச காமின:**
**ஸப்தாஹ யஞ்ஞேன கலௌ பனந்தி தே//**
**(பத்ம புராணம்)**

*இந்தக் கலியுகத்தில் யார் பாபச் செயல்களைச் செய்து, துர் நடத்தையால் கெட்ட வழியில் செல்கிறார்களோ, காமத்தால் செயல்புரிகிறார்களோ அவர்கள் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டும், படித்தும், ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ யக்ஞத்தால் புனிதமடைகிறார்கள். இதை நிரூபிக்கப் பல கதைகள் உள்ளன. அவற்றில் ஒரு கதைதான் "கோகர்ணன் கதை".*

*துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டினம். அந்த பட்டினத்தில்* **"ஆத்ம தேவன்"** *என்ற பெயருடைய ஒரு பிராமணன். அவன்* **"துந்துலி"** *என்ற பெயருடைய தன் பத்தினியுடன் வாழ்ந்துவந்தான். ஆத்மதேவன் வேதங்களை எல்லாம் படித்தவன். அவனுடைய மனைவி அழகாக இருப்பாள். ஆனால் அவளிடத்தில் பக்தி கிடையாது. ஆசார அனுஷ்டானங்களில் ருசி கிடையாது. அவள் ஊரில் ஒரு கலகப் பிரியையாக இருந்து எல்லோரிடத்திலும் சண்டை போடுவாள். ஆத்மதேவனுக்கு தனக்கு குழந்தை பிறக்கவில்லையே என்ற துக்கம். ஒரு நாள் இதே கவலையில் வீட்டை விட்டு வெளியே போய் ஒரு நதி தீரத்தில் ஒரு சன்யாசியை சந்தித்தான். அவரிடம் தனக்குக் குழந்தை இல்லாத குறையைக் கூறினான். அதைக்கேட்ட அந்த சன்யாசி அவனிடம் ஒரு மாம்பழத்தை ஜபித்துக் கொடுத்து "இதை உன் மனைவியிடம் கொடுத்து உண்ணச் சொல். அவள் விரதத்தோடு அனுஷ்டானங்களுடன் இருந்தால் உனக்கு குழந்தை பிறக்கும்" என்று கூறினார்.*

ஆத்மதேவன் மிகவும் சந்தோஷத்துடன் வீட்டிற்கு வந்து மாம்பழத்தை தன் மனைவியிடம் கொடுத்து விவரத்தையும் கூறிவிட்டு அதை அவள் சாப்பிடுகிறாளா இல்லையா என்றும் பார்க்காமல் வீட்டை விட்டு யாத்திரை புறப்பட்டுவிட்டான்.

"துந்துலி" அந்த பழத்தைச் சாப்பிடாமல் தன் தோழிகளை அழைத்து "இந்த பழத்தைச் சாப்பிட்டால் எனக்கு குழந்தை பிறக்கும், அப்போது என் அழகு போய்விடும்" என்று கூறிவிட்டு அந்த பழத்தைத் தன் தங்கைக்கு கொடுக்க நினைத்தாள். அவள் தங்கை அப்போது கர்ப்பமாக இருந்தாள். அக்காள் "துந்துலி" பழத்தைக் கொடுத்ததும் அவள் தன் அக்காளிடம் "எனக்குக் குழந்தை பிறந்தவுடன் அதை உனக்கு கொடுத்துவிடுகிறேன் அதுவரையிலும் நீ கர்ப்பமாக இருப்பதுபோல் நடி, என் கணவனைத் திருப்திபடுத்த எனக்கு பணம் கொடுத்துவிடு, இந்த பழத்தை உன் வீட்டு பசுமாட்டிற்கு கொடுத்துவிடு" என்றாள். "துந்துலி" அவ்வாறே செய்தாள். சில மாதங்கள் கழித்து தன் தங்கைக்குப் பிறந்த குழந்தையை எடுத்துவந்து அது தனக்குப் பிறந்தது என்று கூறி தன் கணவன் "ஆத்மதேவனை" சந்தோஷப்படுத்தினாள்.

சில நாட்கள் கழித்து ஆத்மதேவன் வீட்டு பசுமாடு ஒரு ஆண் குழந்தையை ஈன்றது. அந்த குழந்தையின் இரண்டு காதுகளும் பசுமாட்டின் காதுகளைப்போல் போல் நீண்டு இருந்ததால் "ஆத்மதேவன்" அந்த குழந்தைக்கு "கோகர்ணன்" என்று பெயர் சூட்டினான். தனக்கு பிறந்ததாக நினைத்த அந்த ஆண் குழந்தைக்கு "துந்துகாரி" என்று பெயர் சூட்டினார்கள்.


நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இரண்டு குழந்தைகளும் வளர்ந்தன. **"துந்துகாரி"** மிகவும் மூர்க்க குணம் கொண்டவனாக, துஷ்டர்களிடம் ஸகவாசம் வைத்துக் கொண்டு ஊரில் எல்லாரிடமும் சண்டை போட்டுக் கொண்டிருந்தான். **"கோகர்ணன்"** எல்லா சாஸ்திரங்களையும் கற்று தேஜஸ்வியாக விளங்கினான். "துந்துகாரி" ஒரு சமயம் ஆத்மதேவனிடம் பணம் கேட்டான். அவர் கொடுக்கமாட்டேன் என்று கூறியதும் தந்தை என்றும் பாராமல் அவரை அடித்துவிட்டான். மன வருத்தத்தால் "ஆத்மதேவன்"

வீட்டைவிட்டு போய்விட்டான். “கோகர்ணனும் தீர்த்தயாத்திரை கிளம்பிவிட்டான்.


**“துந்துகாரி’’** பணத்திற்காக வழிப்பறி, கொள்ளை ஆகியவற்றில் ஈடுபட்டான். தட்டிக்கேட்ட தாயான “துந்துலி’’யை அடித்து கொன்றுவிட்டான். பிறகு சில பெண்களை வீட்டிற்கே அழைத்துவந்து உல்லாச வாழ்க்கை வாழத் துவங்கினான். ஒரு நாள் அந்த பெண்கள் அவனிடம் இருந்த பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அவன் தலையில் கல்லைப்போட்டு கொன்று ஒரு பாழும் கிணற்றில் தள்ளிவிட்டு ஒடிவிட்டனர். அதனால் **“துந்துகாரி’’** பித்ருலோகம் அடையமுடியாமல் பிசாசு வடிவம் அடைந்து அந்த வீட்டிலேயே சுற்றி வந்தான்.

வீட்டை விட்டு போன “ஆத்மதேவன்’’ ஒரு காட்டில் ஒரு மரத்தடியில் “கோகர்ணன்’’ தபசில் இருப்பதைப் பார்த்தான். அவரிடம் சென்ற ஆத்மதேவன் விமோசனம் கேட்டான். “கோகர்ணன்’’ அவரிடம் “உங்கள் துக்கத்திற்கு காரணம் பாசம்தான் நீங்கள் காட்டிற்குச் சென்று தவத்தை மேற்கொள்ளுங்கள்’’ என்றான். ஆத்மதேவனும் அப்படியே செய்து முக்தி அடைந்தான். முடிவு அடுத்த மாதம்.

99940 89133 99940 89140



SRI SASTHA CATERING



We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

உ

26.05.2021
ஸ்ரீ மஹாபெரியவா ஜயந்தி




17.05.2021 ஸ்ரீ சங்கர
ஜயந்தி முதல் 26.05.2021
ஸ்ரீ மஹாபெரியவா ஜயந்தி
வரையில் அவரவர் வீடுகளில்
மாலை 5.00 மணி முதல் 6.00
மணி வரை
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்
பாராயணம் செய்து
அம்பாளின் பேருளைப் பெற்று
உலக மக்கள்
பெருந்தொற்றிலிருந்து விடுபட
ப்ரார்த்தனை செய்வோம்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா
அனுஷ பூஜா ஸமிதி, வேளச்சேரி
வேதபாரதி – தமிழகம், புதுவை
9444404510, 9443495950

மகான்களின் பாதம் பணிவோம்


AURO MIRA MEDI AIDS
*House of Home Healthcare Products*

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
9382159199 | auromiramediaids@gmail.com
www.auromiramediaids.in










# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் **"இலவச காப்பகம்"**

அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு வறுமையையும், புற்றுநோய் தரும் வலியையும் சுமந்தபடி வரும் ஏழை புற்றுநோயாளிகள் அனைவரும் நமது அன்புக்கும், அரவணைப்பிற்கும் உரியவர்களே. அவர்களது மற்றும் அவர்கள் குடும்பத்தின் நிலையற்ற எதிர்காலத்தைப் பற்றிய அச்சத்தை ஏழை புற்றுநோயாளிகளின் கண்களில் நம்மால் காண முடியும்.

அத்தகைய அச்சத்துடன் மிச்சமிருக்கும் வாழ்விற்கு விடைதேடி தஞ்சம் புகும் ஏழை புற்றுநோயாளிகளை அன்புடன் அரவணைத்து, உங்களுக்கும் நிம்மதியான எதிர்காலம் இருக்கிறது என்கிற நம்பிக்கை விதையை விதைக்கிறது ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் நம்ம தர்மசாலா. நம்ம தர்மசாலாவில் மூன்று வேளை சத்தான, சுவையான, சைவ உணவு; பாதுகாப்பான, சுகாதாரமான தங்குமிடம் ஆகிய அனைத்தும் ஏழை புற்றுநோயாளிகளுக்கும் அவர்களது ஒரு உதவி

## "கொரோனா" கால விதிகளுக்கு உட்பட்டு இயங்கும் நம்ம தர்மசாலா



நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு தினமும் முகக்கவசங்கள் வழங்கப்படுகிறது. சமூக இடைவெளியுடன் படுக்கைகள் அமைத்தல்; வளாகம் முழுவதும் கிருமிநாசினி தெளித்தல்; நம்ம தர்மசாலாவிற்குள் நுழையும் அனைவருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதனை; கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்தல் ஆகிய தமிழக அரசின் அனைத்து வழிகாட்டுதல்களும் எவ்வித சமரசமும் இன்றி நம்ம தர்மசாலாவில் கண்டிப்புடன் கடைபிடிக்கப்படுகிறது.

யாளருக்கும் நோயாளிகளின் சிகிச்சை காலம் முடியும் வரையில் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஏழை புற்றுநோயாளிகள் அடையாறு கேன்சர் மருத்துவமனையில் முறையான சிகிச்சையை தடையின்றி பெற்று விரைவில் நலம் பெறுகிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை.

நன்கொடையாளர்கள் விரும்பினால், COVID-19 விதிகளுக்கு உட்பட்டு நம்ம தர்மசாலாவிற்கு விஜயம் செய்து எங்களது செயல்பாடுகளை நேரில் கண்டறிந்த பின்னர் நன்கொடை வழங்கி, ஏழை புற்றுநோயாளிகளுக்கு தங்கள் கரங்களினால் உணவு பரிமாறி மகிழலாம்.

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்கிட உதவிடுங்கள். உண்மையான இன்பம் இதுவென்று உணர்ந்திடுங்கள்.**

கடந்த 21 வருடங்களாக ஏழை புற்றுநோயாளிகளை பாதுகாத்து வரும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் தனது சேவை சரித்திரத்தின் மற்றுமொரு புதிய அத்தியாயமாக ஆதரவற்ற முதியவர்களை அரவணைத்திட ஒரு மாபெரும் இலவச முதியோர் இல்லத்தினை சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் செங்கல்பட்டுக்கு அடுத்த மாமண்டூர் கிராமத்தில் கூடிய விரைவில் செயல்படுத்த உள்ளது.

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் சேவை சிந்தனையின் அம்சமாக அமைய உள்ள **ஸ்ரீ ஜயேந்திர பெரியவா நினைவு முதியோர் இல்லம்** காற்றோட்டமான சூழ்நிலையில், விசாலமான அறைகளுடன், முதியவர்களுக்கு அவசியமான வசதிகளுடன் முதலுதவி மற்றும் ஆம்புலன்ஸ் சேவையுடன் சுமார் ரூபாய் **ஆறு கோடி** செலவில் நிர்மாணிக்கப்பட உள்ளது. இம்முதியோர் இல்லம் சிறப்புடன் செயல்பட உங்களின் தாராள நன்கொடையையும், நல்லாசிகளையும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் மனதார வேண்டுகிறது.

இம்முதியோர் இல்லத்தின் கட்டிட நிதிக்கு ரூ.5,00,000/- வழங்குவோர் விரும்பும் பெயரில் ஒரு தங்கும் அறை அமைக்கப்படும். இதன் மூலம் நமது பெற்றோர்களின்



பெயர்கள் காலத்தின் கல்வெட்டில் நிரந்தரமாக இடம்பெறும். இச்செயல் நமது பெற்றோருக்கு நாம் என்னென்றும் நன்றி உரைத்திடும் வகையில் அமையும். மேலும் இப்புனித பணிக்கு தாங்கள் விரும்பும் தொகையை நன்கொடையாக வழங்கலாம். அவர்களின் பெயர்கள் தகுந்த முறையில் நம் முதியோர் இல்லத்தில் பதிவு செய்யப்படும். இந்நற்செயலுக்கு உதவி செய்து காலத்தால் அழியாத பெருஞ்செல்வமான புண்ணியத்தை உங்களுக்கும் உங்கள் சந்ததியினருக்கும் சேர்த்திடுங்கள்.




நோய்வாய்ப்பட்ட ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவி செய்யும் நமது 21 வருஷ கால செயல்பாடுகள் தொய்வின்றி தொடர, நிதியுதவி அளித்த இந்த ஒருமித்த மனதுடைய அடையாறைச் சேர்ந்த தம்பதியர் **திருமதி ஜெயந்தி - திரு விஸ்வநாதன்** அவர்கள் "கொடுப்பதில் உள்ள நிறைவான இன்பத்தை" முற்றிலுமாக உணர்ந்திருக்கிறார்கள். இந்த தம்பதியர் அவர்களது குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் நோய் நொடியின்றி நீடூழி வாழ இறைவனிடம் ப்ரார்த்திக்கிறோம்.


**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

♦ ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம் ♦ ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம் ♦ ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம் ♦ ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் ♦ ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

**Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.**

Account Name : SRI MATHA TRUST
Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20
Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, (next to Harini Skin & Laser Clinic) Chennai - 600 020. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**

vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 5

*இரண்டாவதுப் பிரச்சனையான "நேர மேலாண்மை" யைப் பற்றி பேசுவோம்.*

**"முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல். (குறள் 676 – அதிகாரம் 68)**

*"ஒரு செயலை செய்யும் பொழுது அதை முடிக்கும் விதமும், அதனால் ஏற்படும் இடையூறும், அச்செயல் முடிந்த பொழுது கிடைக்கும் பெரும் பயன் போன்றவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்' என்கிறது வள்ளுவம்.*

*2020 ஏற்படுத்திய மகாப் பெரிய மாற்றங்களில் முதலாவது "கல்வி" என்று பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது அடுத்துவரும் தலைமுறையை தாக்கும் விஷயம் என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எண்ணற்ற"ஆன்லைன்" கல்வி நிறுவனங்கள், வெபினார்கள்* (Webinars), *பட்டறைகள்* (Workshops) *என்று தூள் கிளப்ப, பல பெற்றோர்கள் இந்த ஒரு வருடம் படிக்காவிட்டால் என்ன நஷ்டம் என்று முடிவெடுத்துள்ளனர்.*

*அதே சமயம் ஒரு வருடம் குழந்தைகள் படிக்க வேண்டும் என்று எண்ணிய எண்ணற்றபெற்றோர்களும் உண்டு.*

*உங்கள் முடிவு எதுவாக இருந்தாலும் நேர மேலாண்மை மிக மிக முக்கியம் என்பதை பெற்றோர்கள் உணர வேண்டும். வீட்டிலிருந்து தானே படிக்கப் போகிறோம் என்றஅலட்சியம் உங்களிடமும் கூடாது, குழந்தைகளிடமும் அது வெளிப்படக்கூடாது.*

*காலை எழுந்து குளிப்பது, பூஜையறையில் நமஸ்கரிப்பு, காலை உணவு, சீரான உடை, தலையை நன்றாக வாருவது என்று முன்பு செய்த எதையும் விடாமல் செய்வது என்று மிகச் சிறப்பாக திட்டமிட வேண்டும், திட்டமிட்டபடி செயல்பட வேண்டும். காலை பள்ளி நேரத்திலிருந்து மதியம் முடியும் வரை வயதான தாத்தாப் பாட்டிகள் கூட ஒத்துழைப்பு தர வேண்டும்.*

*அதற்கு குடும்பம் ஒன்றாகப் பேசி செயல்பட வேண்டும்.*

*காரணம் 2021-ம் ஆண்டும் இது தொடரும் என்பதால் இதை யோசித்து செய்யவும். கடந்த வருடத்தின் தவறுகளை இந்த வருடமும் தொடராமல் இருக்க பெற்றோர்கள் கடுமையாக முயல வேண்டும். இன்று பாஸ்போர்ட் வேண்டாம், பயணச்சீட்டு வேண்டாம், உலகின் எந்த மூலையிலிருந்தும், யார் வேண்டுமானாலும் புது புதுப் படிப்புகளைப் படிக்கலாம்.*

*10வது, 12வது பாஸ் செய்த மாணவ மணிகளை அவர்கள் தேர்ந்தெடுத்த படிப்பினைச் சார்ந்த அடிப்படை கோர்ஸுகளில் சேர்ந்து தத்தம் அறிவின் ஆழத்தை அகலப்படுத்தலாம்.*

*வீட்டிலிருந்து தானே படிக்கிறோம் எனும் அலட்சியம் பள்ளி இறுதி, கல்லூரி வகுப்புகளுக்கு இருக்க கூடாது என்று நீங்கள் நினைத்தால் நேர நிர்வாகம் மிக முக்கியமாக தேவை. அதை பெற்றோர்கள், வீட்டில் உள்ள பெரியவர்கள் கட்டாயம் பின்பற்றவேண்டியது மிக மிக முக்கியம்.*

*“பள்ளி, கல்லூரி, ஆபீஸுக்கு செல்லாவிட்டால் என்ன? அவை நம் வீட்டிற்குள்ளேயே வந்துவிட்டன. அதனால் பணியும் அதற்கான நேரமும் எப்பொழுதும் போல் நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும்” என்று எடுத்துக் கூறவேண்டிய பொறுப்பு உங்களுடையது.*

*வீட்டிலிருந்து பணி செய்யும் பொழுது மூத்தவர்கள், பெண்கள், சீரியல், சினிமா, மொபைல் பேச்சு என்று எல்லாவற்றிற்கும் “தடா” போட்டுக் கொள்ள வேண்டும்.*


*“எப்பொழுதும் போல “ஞாயிறு” சுகமானது தான். “மாஸ்க், கை கழுவுதல் இருந்தால் வெளியில் போவோம்” தேவையிருந்தால் செல்வோம் இல்லையேல் நாம் வாழும் வீடு நம் அரண்மனை தானே” என்று பொறுமையாக எடுத்துக் கூறவும்.*

*டென்ஷன் என்பது மாற்றத்தால் ஏற்படுவது சகஜம். இதற்கு வயது வித்தியாசம் கிடையாது என்பது பொதுவான கருத்து. ஆனால் இது தவறான கருத்து, சிறுவர்களுக்கு “டென்ஷன்” என்பது புரியாத புதிர். ஆனால் பெரியவர்களுக்கு அது நன்றாக புரியும். அதனால் தங்களை கட்டுப்படுத்த இயலும். தங்களை கட்டுப்படுத்திக் கொண்டு பொறுமையை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.*

*பெற்றோர்களே உங்களுக்கு பொறுமை கூட வேண்டும் என்றால் நேர நிர்வாகத்தின் திறனை கூட்டிக் கொள்ள வேண்டும். “ஆன்லைன்” ஆதிக்கத்திற்குள் நீங்கள் செல்லாமல், ஆன்லைனை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வாருங்கள்.*

தொடரும்....

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



## ஸ்ரீ காயத்ரீ

எல்லா மனிதர்களுக்கும் ஸுகம் வேண்டும் என்கிற ஆசை பொதுவாக இருக்கிறது. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு பகவானின் கிருபையை அடைவது மிக அவசியம். பகவானின் கிருபையை அடைவதற்கு சில ஸாதனங்களை சாஸ்திரங்கள் கூறியிருக்கின்றன. மந்த்ரஜபம் என்பது அப்பேர்பட்ட ஸாதனங்களில் ஒன்று. ஏதாவது ஒரு மந்த்ரத்தை நிஷ்டையுடன் ஜபித்தால் இஷ்டார்த்தம் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

மந்த்ரங்களில் "காயத்ரீ" மந்த்ரம் மிகவும் உயர்ந்தது. காயத்ரீ மந்த்ரத்தை ஜபித்தவனுக்கு ஸகல க்ஷேமங்களும் உண்டாகும். "காயத்ரீ" என்கிற சப்தம் மட்டுமே காயத்ரீ மந்த்ரத்தை ஜபிக்கிறவனை ஆபத்திலிருந்து காப்பாற்ற கூடியது என்று நம்புகிறார்கள். தொடரும்....

## வருந்துகிறோம்

### சேக்கிழார் தொண்டர் தி.ந.ராமச்சந்திரன்

தமிழ் நல்உலகம் போற்றிய பெரும் ஞானக்கடல். ஒரு தனி மனிதராக சைவ உலகத்திற்கு அவர் செய்த தொண்டுகள் சொல்லி முடியாதன. "சைவ சிந்தாந்த பாடசாலை" என்ற அமைப்பின் பெயரில் தேவாரம் வேதசாரம், நீல கண்ட பாடியம், சைவ வேதாந்தம், வேதாந்த மத விசாரம் போன்ற பல நூல்களை வெளியிட்டு நம் சிந்தாந்தங்களை கொண்டு சென்ற பணி அளவிட முடியாது. பாரதியார் நூல்கள், ஔவையார் நூல்கள், திருமந்திரம் போன்ற நம் பொக்கிஷங்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றார். இவரின் சொற்பொழிவிற்கு பல அறிஞர்கள் வந்து கருத்துக்களை கேட்பார்கள். ஆகையால் "அறிஞர்களின் அறிஞர்" என்று போற்றப்படுகிறார். சிவம் என்றால் அன்பு, அதை வாழ்வில் கணந்தோறும் தான் உணர்ந்து நமக்கு உணர்த்திய மகான் டி.என்.ஆர். அவர்களை பிரிந்து வாழும் குடும்பத்தினர்களுக்கு வேதபாரதி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. ஆசிரியர்.


Rs.1000
inclusive of
tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
www.woppershop.com
WOPPER

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்றமாத தொடர்ச்சி....*

*நமக்குள்ளேயும் கூட, சுபிட்சமாக இருப்பவர்கள் வேதத்தின் மீது அதிக விசுவாசம் இல்லாதவர்களாயிருப்பார்; விசுவாசம் உள்ளவர்கள் சுபிட்சமாக இருக்க மாட்டார்கள். நடைமுறையில், பல நேரங்களில் விசுவாசம் கொண்டவர்கள், துன்பத்திலேயே இருக்கிறார்கள். எனவே, வேதத்தின் மீது விசுவாசம் வைத்து அதன்படி நடப்பதற்கும், உலக வாழ்வின் சுகங்களுக்கும் நேரடியான தொடர்பு ஒன்றும் இல்லை என்று தோன்றுகிறது. இருப்பினும், வேதத்தின் மீதான விசுவாசம் தொடர்கிறது; சில நேரங்களில் மரியாதையுடனும், சில சமயங்களில், அச்சத்துடனும்; என்ன காரணம்?*

*3.1 வேதங்கள் அபௌருஷேயமானவை :*

*காரணம் என்னவென்றால், வேதங்கள் மனிதரால் இயற்றப்பட்டவை அல்ல. அவற்றை மனிதன் ஒருவன் ஆக்கினான் என்று சொல்லுவது சாத்தியமேயல்ல. பின், யார் அவற்றைச் செய்தார் என்ற கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கு விடைகாண, முதல் அத்தியாயத்தில் நாம் கண்டவற்றை நினைவுகூற வேண்டும். எவற்றுக்கெல்லாம் நாம் பொறுப்போ காரணமோ ஆகமுடியாதோ, அவற்றுக்கெல்லாம் பொறுப்பும் காரணமும் ஆகிறவனே இறைவன் என்று முன்பு நாம் கண்டோம். எனவே, வேதங்கள், கடவுளால்தான் இயற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சிலர் இதை ஒப்புக்கொள்ள சிரமப்படுகிறார்கள். நாத்திகர்களை விடுங்கள், ஆஸ்திகர்களிடையே கூட, இத்தகைய நம்பிக்கை பலவீனமாகவும் உள்ளது; பாரம்பரிய முறைப்படி வேதங்களைக் கற்றல் இல்லாமல் போனதே, இதற்குக் காரணம். வேதங்களைப்பற்றி ஏதாவது அவர்கள் படிக்கிறார்கள் என்றால் அவையெல்லாம் மேனாட்டு ஆசிரியர்களின் கருத்துகளே.*

*தொடரும்...*

# “பாரத தேசப் புனித யாத்ரை”

*திருச்சி* **K.கணேசன்**

*‘அத்யாயம் - 12’*

*பிறகு மீர்காட் அனுமன் கோவில் தாண்டி ஒரு வீட்டிலுள்ள விருத்தாதித்யரை தரிசித்தோம். அதனை அடுத்து கங்கைக்கரை ஓரமாகவே நடந்து சங்கட்காட்டில் யம ஆதித்யரை துதித்தோம். பிறகு லலிதா காட்டிலுள்ள கங்கா ஆதித்யரை எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. மேலும் இதனைப்பற்றி அங்குள்ள பகுதி மக்களுக்கும் தெரியவில்லை. பஞ்ச கங்கா காட்டில் மங்கள கௌரி கோவில் சிவலிங்கத்திற்கு அருகிலுள்ள தூணில் மயூகாதி ஆதித்யரை தரிசித்தோம். (200 படிகள் ஏறி இறங்கி தரிசித்தோம்) பிறகு திரிலோசனா காட்டிலுள்ள கோவில் ப்ரகாரம் பின்புறமுள்ள ஆரணாதித்யரை வணங்கினோம். இங்கு 250 படிகள் ஏறி இறங்கினோம். பிறகு காமேஸ்வரர் ஆலயத்தில் ககோல ஆதித்யர் (இவர் கருடன் மற்றும் ஹதையால் ஆராதிக்கப்பட்டவர்) வணங்கி மகிழ்ந்தோம். இதன் அருகில் ஹதை பூஜித்த விநதேஸ்வரர் லிங்கத்தையும் தரிசித்தோம். ஒரு நாள் முழுவதும் இப்படி காலை மற்றும் மாலை நேரத்தில் அலைந்து திரிந்து 12 ஆதித்யர் (சூர்யன்) கோவிலில் 8 மட்டுமே எங்களால் தரிசிக்க முடிந்தது. அங்கு பல வருடங்களாக வசிக்கும் காசி லோக்கல் மக்களுக்கே மீதி 4 ஆதித்யர் கோவில் எங்கு உள்ளது என்பது தெரியவில்லை என்பதுதான் மனதிற்கு சற்று வருத்தத்தை அளித்தது. ஆனால் இதனைப் பற்றி சிறப்பாக காசி காண்ட் புஸ்தகத்தில் பானு ஸப்தமி அன்று 12 ஆதித்யர்களையும் தரிசித்தால் நல்லது என்று போடப்பட்டுள்ளது. அனைத்து கோவில்களையும் இன்று முழுவதும் ஏறி/இறங்கி தரிசித்ததாலும் இருட்டிவிட்டதாலும் ரிக்ஷாவில் தங்கியுள்ள இடத்திற்கு வந்து ஓய்வு எடுத்தோம்.*

*20.04.2015 திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு எழுந்து வழக்கம் போல் தங்கியுள்ள இடத்திலேயே குளித்துவிட்டு ஸந்த்யாவந்தனம் ஆகியவற்றை முடித்துக் கொண்டு காலை 07.15 மணிக்கு கிளம்பி நடந்து கேதார்காட் சென்று கங்கை நதியில் குளித்துவிட்டு சொம்பில் கங்கை நீரை எடுத்துக் கொண்டு படித்துறையில் இருந்த பெரிய சிவலிங்கத்திற்கு ஸ்லோகம் சொல்லிக் கொண்டே அபிஷேகம் செய்தோம். பிறகு அருகிலுள்ள காசி கேதார் நாதேஸ்வர் கோவில் சென்று மீண்டும் கங்கை ஜலத்தால் அபிஷேகம் எங்கள் கையால் நாங்களே செய்து*


*தரிசித்தோம். இந்த கோவில் பின்புறம் ப்ரகாரத்தில் உள்ள விநாயகரை தரிசித்தால் 64 விநாயகரை தரிசித்த புண்ணிய பலன் கிடைக்கும் என்று கூறியதால் அவரை நன்கு தரிசித்தோம். பிறகு ப்ரகாரத்திலுள்ள இராமலிங்கேஸ்வரர், சொக்கநாதர், மீனாட்சி அம்பாள் தரிசித்து வழிபட்டோம். பின்னர் அங்கு ஒரு மேடையில் 12 ஜோதிர் லிங்கங்களை தரிசித்தோம். ஒரு மாதத்திற்கு முன்பு தான் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்று கூறினர். இந்த லிங்கங்கள் 12ம் பளிங்கினால் ஆனது. அங்குள்ள அனைத்து சந்நிதிகளையும் தரிசித்துவிட்டு பின்புறமாகக் கங்கைக் கரையின் வழியாக ஓரமாக வந்து நாங்கள் தங்கியுள்ள இடத்தினை அடைந்தோம்.*

*காலை 9.30 மணிக்கு காசியில் செய்ய வேண்டிய கங்கா பூஜை (நாம் ஊருக்கு கொண்டு வருவதற்காக ப்ரயாகையில் - திரிவேணி சங்கமத்தில் எடுத்த கங்கை நீர், காசியில் கடையில் பித்தளை / தாமிர சொம்பு வாங்கி சீல் வைத்த கங்கா சொம்பு ஜலம்) மற்றும் தம்பதி பூஜையினை இன்று சிறப்பாக செய்தோம். வயது முதிர்ந்த நல்ல வேதம் படித்த சாஸ்திரிகளும் அவரின் மனைவியும் எங்களுக்கு தம்பதிகளாக (காசி ஸ்ரீ விஸ்வநாதர் & விசாலாட்க்ஷியாக) இருந்து நாங்கள் செய்த தம்பதி பூஜையினை ஏற்றுக் கொண்டனர். இங்கும் ப்ரயாகையில் செய்தது போலவே* 9x5 *வேஷ்டி மாமிக்கு 9 கெஜம் புடவை (மடிசார்) தங்க திருமாங்கல்யம் மஞ்சள் கயிற்றில் கோற்றது, வெள்ளி மெட்டி, ரவிக்கை துணி மற்றும் மங்களதிரவிய பொருட்கள், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பூமாலை மற்றும் உதிரிப்பூக்கள் (அர்ச்சனைக்கு) வைத்து செய்தோம். இந்த பொருட்களை நம் ஊரிலேயே வாங்கி எடுத்துச் செல்லலாம் அல்லது விமானத்தில் செல்பவர்கள் அங்கேயே வாங்கிக் கொள்ளலாம் அனைத்தும் காசியிலேயே கடைகளில் கிடைக்கின்றன. சாஸ்திரிகளிடம் கேட்டால் ஏற்பாடு செய்வார். நாங்கள் திருச்சியிலிருந்தே அனைத்தையும் வாங்கிச் சென்றோம். கங்கா அஷ்டோத்திரம் சொல்லி கங்கா பூஜையும் மற்றும் தம்பதி பூஜையும் செய்து நமஸ்கரித்து ஆசிகள் பெற்றோம். மனதிற்கு மிகவும் நிறைவாக இருந்தது. ப்ரயாகையில் தம்பதி பூஜை செய்வது நம் விருப்பம் ஆனால் காசியில் தம்பதி பூஜை கட்டாயம் செய்ய வேண்டும். நாங்கள் இரண்டு இடத்திலும் அங்குள்ள வயதான தம்பதிகளுக்கு செய்து மன நிறைவு பெற்றோம். பிறகு சாப்பிட்டு ஓய்வு எடுத்தோம்.*

தொடரும்...

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## தக்கத் தருணத்தில் இறைவன் தண்டிப்பார்



*சென்றமாத தொடர்ச்சி...*

*தனக்குத் தெரிந்த நண்பர்களை அவன் அணுகியபோது, அவர்கள் அவனிடம் 'நீ ஊரை விட்டுச் சென்றதும், இந்த கிராமத்தை ஒரு பூகம்பம் தாக்கியது. சில வீடுகள்தான் அதில் இடிந்து விழுந்தன. துரதிர்ஷ்டவசமாக, உன்னுடைய வீடு முழுவதுமாக நொறுங்கி விட்டது. உனது மனைவியும் குழந்தையும் அந்த இடர்பாடுகளில் சிக்கிக் கொண்டு, உடல் நசுங்கி இறந்துவிட்டார்கள்'' என்று நடந்ததைக் கூறினார்கள். அதிர்ச்சியும், கவலையும் அடைவதற்குப் பதில், அவன் தன் பார்வையை மேலே செலுத்தி, இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, 'இறைவா! நான் சொன்னது தவறு, உன் இராஜ்ஜியத்தில் இருள் இல்லை; ஆனால் தாமதம் உள்ளது'' என்று கூறினான். தெய்வத்திடமிருந்து கிடைத்த தண்டனையை நினைத்து அவன் மனம் அமைதியை அடைந்தது.*

*"அதர்மத்தில் செல்லும் ஒருவன் சிறிது காலம் நன்கு செழிப்புடன் வளர்ந்து வந்து, செல்வங்களை எல்லாம் அடைந்து, தன்னை எதிர்ப்பவர்களையும் ஜெயித்து, கடைசியில், அவன் முற்றிலும் அழிந்து போவான்'' என்று மிகப் புனிதமான மனுநீதியில் கூறப்பட்டுள்ளது. இறைவனின் நீதிச் சக்கரம் மெதுவாகச் சுழன்றாலும், நிச்சயமாக அது சுழல்கிறது என்ற நம்பிக்கையுடன் இருப்பது நமக்கு நன்மை பயக்கும். ஒரு பாவி தனது தவறுகளைச் சீர்படுத்திக் கொள்வதற்காகத்தான் அவனுக்கு நேரம் அளிக்கப்படுகிறது.*

*முற்றும்.*

# சாதனைப் பறவைகள்

*(சாதாரணப் பெண்களின் அசாதாரண வெற்றிக் கதைகள்)*

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



**கலைமாமணி பொன்னுத்தாய், முதல் பெண் நாதஸ்வர கலைஞர் 2ம் பகுதி**

*பொன்னுத்தாயின் வாழ்விலும் சிக்கல் வந்தது என்று சொல்லி நிறுத்தியிருந்தேன்.. இனி தொடர்ந்து அவரது வாழ்க்கையைப் படியுங்கள்!*

*பொன்னுத்தாயின் கணவர் சிதம்பர முதலியார் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். திரு.பக்தவத்சலம், திரு. காமராஜ் ஆகியோருடன் நெருங்கிய தோழராகவும் இருந்தார். மதுரை மாநகராட்சித் தலைவராகவும், எம்.எல்.சி. யாகவும், மதுரை மீனாக்ஷி கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவராகவும் இருந்து 1972-ம் ஆண்டு காலமானார். அவரது மறைவுக்குப் பின்னர் பொன்னுத்தாய் தன் இசை நிகழ்ச்சிகளைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டார். அதுவும் திருமண நிகழ்ச்சிகளில் வாசிப்பதை மிகவும் தவிர்த்தார். இதற்கு அவரது மனநிலையும் சுய கட்டுப்பாடும் மட்டும் காரணமில்லை. சமூகமும்தான்! ஆனாலும் ரசிகர்களும், அவருடைய நலம் விரும்பிகளும், அவர் மீது அன்பு கொண்டிருந்தவர்களும் பொன்னுத்தாயை அவ்வாறு சும்மா இருப்பதற்கு விட்டு விடவில்லை. தெய்வீக இசைக்கு இந்த கட்டுப்பாடுகள் தேவையில்லை என்று அவரை வலியுறுத்தி, நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொள்ள வைத்தனர்.*

*சஞ்சனா மீனாக்ஷி (மிக்க நன்றிகள்) என்பவருக்கு பொன்னுத்தாய் அம்மா கொடுத்த நேர்காணலிருந்து (நன்றி : அந்திமழை) சில வரிகள்*

*“ஒம்பது வயசுல நாயனத்தை எடுத்த நான், ஒன்பது மாசக் கர்ப்பிணியா இருக்கறப்பவும் சிரமப்படாம, விடிய விடியக் கச்சேரி வாசிச்சிருக்கிறேன். பரிசாகக் கிடைக்கப்பெற்றதங்க மெடல்களை (23) அழிச்சு நகை செஞ்சு, ரெண்டு பெண்களைக் கட்டிக் கொடுத்தேன். மதுரை காந்தி மியூசியம் திறப்பு விழா, இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு போன்றவற்றிற்கு நாதஸ்வரம் வாசிச்சிருக்கேன். நான்*

நாதஸ்வரக் கலைஞர்கள் சங்கத்தின் தலைவரா இருந்தப்போ, பல கலைஞர்களுக்கு அரசாங்கத்தோட வீட்டுமனை கிடைக்கச் செய்தேன். எனக்கும் குடுத்தாங்க. அப்போ நான் வசதியா வாழ்ந்ததால, வேண்டாம்னு திருப்பிக் கொடுத்துட்டேன்''.

"பிரதமராக இருந்த நேருவும், அப்போதைய ஜனாதிபதி ராதாகிருஷ்ணனும் என் வாசிப்பை ரசித்து பதக்கம் வழங்கியிருக்காங்க. அதுபோல முதல்வராக இருந்த பக்தவசலம் தங்கப்பதக்கம் வழங்கி பாராட்டியிருக்காங்க, முன்னாள் முதல்வர்கள், காமராஜர், கருணாநிதி ஆகியோரிடமும் பாராட்டுச் சான்றிதழ்களும் பரிசுகளும் பெற்றிருக்கிறேன். நாதகான அரசி, நாதகான ரத்தினம், நாதகான நிதி, நாதகலாவாணி, நாதஸ்வர வித்வாம்சினி கலைமாமணி, முத்தமிழ் பேரறிஞர், கலைமுதுமணி உள்ளிட்ட பல பட்டங்களை அரசு, பல்கலைக்கழகங்கள், தமிழிசை மன்றங்கள் தந்து பெருமைப்படுத்தின.

பொன்னுத்தாயின் பேரன் (மகன் தங்கவேல் முருகனின் மகன்) விக்னேஸ்வரன் தனியார் பள்ளியில் மிருதங்க ஆசிரியராக இருக்கிறார். "பொன்னுத்தாய் இசையாலயா'' என்றஇசைப்பள்ளியை நடத்தி வருவதாகத் தெரிகிறது. பொன்னுத்தாயிடம் நாதஸ்வரம் பயின்றவர். தன் பாட்டி பற்றி அவர் தந்த தகவல்கள் :

"சபரிமலையில் புதிய ஐயப்பன் சிலை பிரதிஷ்டை செய்யும் முன்னர் தமிழ்நாடு முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது அதனுடன் நாதஸ்வரம் வாசித்துச் செல்லும் பேறு பெற்றவர் எங்க பாட்டி பொன்னுத்தாய். உலகத்தமிழ் மாநாடு உள்ளிட்ட சிறப்பு மாநாடுகள், பெரிய அரசியல் மாநாடுகள் போன்றவற்றில் பாட்டியின் நாதஸ்வரம் ஒலித்திருக்கிறது. புட்டப்பர்த்தி சாயிபாபா முன்பாகவும் தமிழகத்திலுள்ள பெரும்பாலான ஆதீனங்களிலும் வாசித்திருக்கிறார். கடைசியாக அவர் வாசித்த பொது நிகழ்ச்சியென்றால், சில ஆண்டுகளுக்கு முன்னர் உழவர் சந்தை திறப்பு விழாவில் வாசித்தார். ஒன்பதாவது வயதில் துவங்கி 77 வயது வரை விடாது வாசித்தார். அதன் பிறகு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளிலும் குடும்ப நிகழ்ச்சிகளிலும் மட்டுமே வாசித்தார். பாட்டியிடம் பயிற்சி பெற்றவர்கள் பலர். அமெரிக்க

பல்கலைக்கழக மாணவி கரிஷ்மாகிங் என்பவர் இங்கு வந்து பாட்டியிடம் நாதஸ்வரம் பயின்று மதுரையில் அரங்கேற்றம் நடத்தினார்.

பாட்டி யாரிடமும் எதையும் கேட்டுப் பெறாதவர். மதுரை சோமு அவர்கள் தான் பாட்டிக்கு கலைமாமணி விருது (1990) கிடைக்கக் காரணமாக இருந்தவர். அப்போது கூட வேண்டாம் என்றுதான் சொன்னார். சில ஆண்டுகளுக்கு முன்னர் மத்தியில் அமைச்சராக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் பாட்டியிடம், "நீங்கள் ஒரு மனு கொடுங்கள் நான் உங்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்" என வலியுறுத்தினார். "அதுவாக வந்தால் வரட்டும்.. நான் தேடிப்போகமாட்டேன்" எனச் சொல்லிவிட்டார்" என்றார் விக்னேஸ்வரன்.

ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்ற துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பெண் சாதித்திருக்கிறார் என்றால் பெருமிதப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அவர் தகுதிக்கேற்ற அளவு நினைவுக் கூறப்படவில்லை என்பது மிகவும் வேதனையானது. இவர் மட்டுமல்ல, இன்னும் ஏராளமான பெண் சாதனையாளர்கள் குடத்திலிட்ட விளக்காகவே வாழ்ந்து மறைந்துள்ளனர். ஆனால் ஒரு உண்மை என்னவென்றால், அவர்களுக்கு அது கிடைக்கவில்லை. இது கிடைக்கவில்லை என்று நாம்தான் உருகுகிறோமே தவிர, அவர்கள் எதையும் எதிர்பார்க்காமல் இந்த உலகிற்கும் மனித குலத்திற்கும் தன்னலமற்ற தொண்டாற்றியவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று இருந்து விட்டவர்கள்.

பொன்னுதாயி அம்மா தனது இறுதிக் காலகட்டத்தில் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததாகவும், அரசின் ரூ.500 ஓய்வூதியத்தில் ஜீவனம் நடத்தியதாகவும் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. இந்தப் பெண்மணியின் மூச்சுக்காற்று அவரது உடலை விட்டுப் போயிருக்கிறது. ஆனால் நாதஸ்வர ஓசையோடு கலந்து இன்னும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டேதான் இருக்கிறது. இந்த இசையன்னையைப் போற்றுவோம்.

தொடரும்...

# பசு - சர்வரோக நிவாரணி

## உடல் நலம்

*திட்டமிட்டு நாட்டு பசுக்கள் அழிக்கப்பட்டு கலப்பின 'ஜெர்ஸி'' மாடுகளை பாரதத்தில் களமிறக்கினர் கிறிஸ்துவ ஆங்கிலேயர்கள்.*

*வெள்ளந்தியாக இருந்த நமது மக்களிடம் நாட்டு பசுக்களைவிட 'ஜெர்ஸி'' பசுக்கள் அதிக அளவு பால் கொடுக்கும் என்ற ஒரே செய்தியை சொல்லி இன்றைக்கு 'ஜெர்ஸி' இனங்கள் பெருமளவில் நமது தேசத்தில் விவசாயிகளால் வளர்க்கப்படுகிறது.*

*இந்த மாடுகள் கொடுக்கும் பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை தயிர், வெண்ணெய், மோர், நெய் போன்றவற்றை உட்கொள்ள ஆரம்பத்திலிருந்துதான் உடலில் தீராத வியாதிகள் வருவதற்கு வழியானது.*

*இன்றைக்கு சர்வசாதாரணமாக நீரிழிவு (சக்கரை), இரத்தக்கொதிப்பு, புற்றுநோய், செரிமாணக் கோளாறு, இதயம் பாதிப்பு போன்றவை சமூதாயத்தில் இல்லாதவர்களே இல்லை என்றளவில் ஆரோக்கியமான நபரை தேடவேண்டியுள்ளது. இதற்கு அடிப்படை காரணம் 'ஜெர்ஸி' மாடுகளின் பால் மற்றும் பால் சார்ந்தப் பொருட்களை உட்கொள்வதேயாகும்.*

*இந்த வியாதிகளில் பெண்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக சிறு வயதிலேயே பெண் குழந்தைகள் பருவத்தை அடைகிறார்கள், அதுபோல் தைராய்டு சுரப்பி குறைபாடுகளால் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள்.*

*நாட்டுப் பசுக்கள் இயற்கையானவை. 'ஜெர்ஸி' இனம் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை. பொதுவாக இயற்கைக்கு எதிராக வாழ்வதிலோ, செயல்படுவதிலோ வெற்றியோ, முக்தியோ, ஆரோக்கிமோ கிடைப்பதற்கான வாய்ப்பில்லை.*

*இப்போதெல்லாம் பசுவையும், எருதையும் (காளை) இயற்கையாக சேர வைப்பதற்கு பதிலாக உயிரணுக்களை ஊசியின் மூலமாக செலுத்தி பசுக்களின் இனப்பெருக்கம் செய்விக்கிறார்கள்.*

*'ஜெர்ஸி' என்ற இனம் நமது நாட்டு பாரம்பரிய பசு, பன்றி, காட்டெருமை, மற்றும் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற*

*நாடுகளின் காடுகளில் வாழும் யுராஸ் என்னும் ஒருவகை எருமை ஆகியவற்றின் உயிரணுக்களின் கூட்டுக் கலவையாகும்.*

*சாத்வீகமான உணவுப் பொருட்களை உட்கொண்டு இறை சக்தியோடு சாத்வீக குணத்தோடு பால் கொடுக்கும் நமது பாரம்பரிய நாட்டுப் பசுக்களுக்கு பதிலாக இந்த கலவை இனமான ஜெர்ஸி மாடுகளின் பொருட்களை உட்கொண்டு வருகிறோம். இதன் காரணமாகத்தான் சாத்வீக குணங்களை இழந்த மனிதன் காடுகளில் வாழும் மிருகங்களின் குணங்களை பெறுகிறான். மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கு சற்றும் துணைபுரியாத இப்பொருட்களை உண்பதால் அனைத்து வியாதிகளும் உடலில் சுலபமாக பிடித்துக் கொள்கிறது.*

*இந்தப் பால் பொருட்கள் பதப்படுத்தி விற்பனை செய்யப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட கொழுப்புகள் நிறைந்த இந்தப் பொருட்கள் மேலும் உடல் நலத்தை மோசமாக்குகின்றன.*

*1947-ல் பாரத தேசம் சுதந்திரம் அடைந்தபோது நம் நாட்டில் இருந்த நாட்டு மாடுகளின் எண்ணிக்கை 60 கோடி, ஆனால், மக்கள் தொகை 30 கோடி மட்டுமே. அதாவது ஒருவருக்கு இரண்டு மாடுகள் என்றளவில் இருந்தன.*

*மக்கள் தொகை கூடும்போது மாடுகளின் எண்ணிக்கையை பெருக்கி இருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு 130 கோடிக்கும் மேல் மக்கள் பெருக்கம் இருக்கும் போது, தற்போதைக்கு 13 கோடி நாட்டு மாடுகளே உள்ளன. அதாவது, 10 பேருக்கு ஒரு மாடு என்ற அளவில் எண்ணிக்கை சுருங்கிவிட்டது.*

*1947க்குப் பிறகு நமது தேசத்தில் அமைந்த அரசு, கிறிஸ்தவ ஆங்கிலேயர்களின் எண்ணங்களை நிறைவேற்ற அனைத்து வேலைகளையும் செய்தது, தொடர்ந்து அரை நூற்றாண்டு காலமாக செயல்பட்ட பொறுப்பற்ற மக்களின் நலன்மீது அக்கறையில்லாத இந்த அரசினால் பல நாட்டு இன மாடுகள் முற்றாக அழிக்கப்பட்டன.* *தொடரும்...*

*- ஆதிரையன்*

# பதினெண் புராணங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.ஏட்., பரமக்குடி)

வேதத்தின் அங்கமாக விளங்கும் புராணங்கள் வேத தத்துவங்களைக் கதைகளின் மூலமாகவும் உள்ளத்தில் பதிக்கின்றன! துவாபரயுகத்தின் முடிவில் விஷ்ணு வேதவ்யாசராகத் தோன்றிப் புராணப்பாகுபாடு செய்தார்!.

**பதினெட்டின் பெருமை :**

பதினெட்டு என்னும் எண் வெற்றிக்கு அடையாளம்! அதனை மனதிற் கொண்ட நம் பெரியோர் பலவற்றைப் பதினெட்டாக வகுத்தனர்.

| | |
|---|---|
| கிராமங்கள் - 18 | சித்தர்கள் - 18 |
| ஜாதிகள் - 18 | மகரிஷிகள் - 18 |
| மொழிகள் - 18 | ஸ்மிருதிகள் - 18 |
| வாத்தியங்கள் - 18 | கணங்கள் - 18 |
| உடுத்தும் ஆடை - 18 முழம் | கூலம் - 18 |
| பாரதம் - 18 பர்வா | உபபுராணங்கள் - 18 |
| பாரதப்போர் - 18 நாட்கள் | கீழ்க்கணக்கு நூல்கள் - 18 |
| பாரதப்போரில் அழிந்தபடைகள் - 18 | மேல்கணக்கு நூல்கள்- 18 |
| பகவத்கீதை - 18 அத்தியாயம் | மூலங்கள் (வேர்கள்) - 18 |
| தர்ம நூல்கள் - 18 | ஆகமங்கள் - 18 |
| ஐயப்பன் படிகள் - 18 | |

ஆகையால் தான் வியாசர் புராணங்களையும் வகுத்தார். இப்பதினெட்டுப் புராணங்களையும் விரிவாகப் பார்ப்போம்.

**1. பிரும்ம புராணம் :** பிரும்மாவால் கூறப்பட்டதால் இப்புராணம் "பிரம்ம புராணம்" எனப் பெற்றது! பிரம்மாவின் பெருமைகளை இப்புராணம் பேசும்! 13000 சுலோகங்களையும் 243 அத்யாயங்களையும் கொண்டது.

கோத்திரங்களுக்கும், பிரவரங்களக்கும் முதற்காரணமான சப்தரிஷிகள், அஷ்டவசுக்கள், ஏகதெசருத்திரர்கள், துவாதச, ஆதித்யர்கள் பதினான்கு மன்வந்தரங்கள், சூரியனின்கதை, தன்வந்திரி அவதாரம், ஆயுர்வேதம், பனிரெண்டு சூரிய பூஜை, சிவ சஹஸ்ரநாமம், சூரிய அஷ்டோத்திரம், முருகன் அனைத்துப் பெண்களையும், பார்வதியாகவே காணல், அகலிகை - கௌதமர்கதை, கருடமணி

*நாதகதை, கங்கையின் பற்பலகட்டங்கள், கண்ணன் கதைகள், கோணாத்தியதலம், சுபத்ரையின் முற்பிறவி, தீர்த்தயாத்திரை, உமாவின் வர்ண விசேஷம், சகல பாவங்களையும் அகற்றவல்ல பாரம்பர தோத்திரம், கௌசிகனின் முற்பிறவி முதலியவைகள் இப்புராணத்தில் கூறப்பட்டுள்ளன.*

**2. பாத்ம புராணம் :** *பத்மவடிவமான உலகம் பற்றிக் கூறுவதால் இது "பாத்ம புராணம்" எனப் பெயர் பெற்றது. ஆதி, சிருஷ்டி, பூமி, பாதாள, புஷ்கர, உத்தர எனும் ஆறு காண்டங்களும், 628 அத்யாயங்களும் 55000 சுலோகங்களையும் கொண்டது.*

*வாலி, சுக்ரீவர், பிரஹலாதர் இவர்களது முற்பிறவி, விஷ்ணு சஹஸ்ரநாமம், கிருஷ்ண அஷ்டோத்திரம், அரசமரம், துளசி ஆகியவற்றின் மகிமை, 25 ஏகாதசிகளின் பெயர் மற்றும் பெருமைகள், பகவத் கீதை 18 அத்யாயங்களுக்கும் தனித்தனிக்கதைகள், அடியார் பெருமை, வைசாகப்பெருமை, ராமர் நடத்திய அச்வமேதம், பலதலங்கள், தீர்த்தங்கள், விரதங்கள், பெண்கடமை, துர்வாச சாபத்தால் தர்மதேவதை முற்பிறவி எடுத்தல், மோதகம் உண்டான வரலாறு, கோவிரதம், பாகவத சப்தாஹம், சந்ததி உண்டாகாத பாபம், பெதாகாரம், சிவகீதை, ராமகீதை, பிரதக்ஷிண தத்துவம், கற்பூரதத்துவம், ஆஞ்சநேயரின் சிவபக்தி, வேதாந்தக்கதைகள் முதலியவற்றை இதில் காணலாம்! காளிதாசன், பவழுதி, கிருஷ்ணமித்திரர், ஸ்ரீதேரிகர் முதலியோர் இப்புராணத்திலிருந்து தங்கள் நூல்களுக்கு ஆதாரம், சிலபதங்கள் ஆகியவற்றை கைக் கொண்டனர்.*

தொடரும்.....

## வருந்துகிறோம்

*தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா மேலாளர் ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள் 27.03.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் இழப்பு நம்மை மீளாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. மிகவும் அன்புள்ளம் கொண்ட பொறுப்புள்ள சிறந்த பண்பாளர். அவரை இழந்து வாடும் பள்ளி தாளாளர், பள்ளி நிர்வாகிகள், குடும்பத்தினர்களுக்கு வேதபாரதி சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.*

*ஆசிரியர்.*

# சிவநேயப் பேரவையின் மகளிர் விருது



சிவநேயப் பேரவை எனும் அமைப்பு சென்னை மடிப்பாக்கத்திலிருந்து இயங்கிவருகிறது. சிவதொண்டுடன் கலை, இலக்கியம், சொற்பொழிவு, கவியரங்கம் மற்றும் மக்கள் தொண்டு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கும் பன்முக நோக்கங்களுடன் ஆத்மார்த்தமாக இயங்கி வருகிறது. மாதம் தோறும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஆடம்பரமின்றி, சுயநபர் போற்றுதல்களின்றி, மிகுந்த சிவபக்தியுடன் சிவபக்தர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. ஆண்கள், பெண்கள், சிறுமிகள் என்று அனைவரது திறன்களையும் ஊக்குவிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 'ஈச நேசன்மகஸ்ரீ' இதன் ஸ்தாபகர் (இவரது சிறப்புகள் பற்றி தனிக் கட்டுரை எழுத வேண்டும்)

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஏழாம் தேதி முப்பெரும் விழாவாக நங்கநல்லூர் வாழ்க வளமுடன் சிற்றரங்கத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினர். எல்லாம் வல்ல இறைவன் தென்னாட்டுடைய சிவனைப் போற்றும் வகையில் சிவாச்சாரியார்களால் சிவவழிபாடும் சிறப்பாக நடைபெற்று, விழா தொடங்கியது. (சிறுவர்கள் தேவாரம், சிவபுராணம் ஓதினர், அன்னை நாட்டியாலயாவின் மாணவிகள் சிவனின் பல்வேறு தாண்டவங்களைக் காண்போர் கண்கள் பனித்து உள்ளம் உருகும்படியாக அதி அற்புதமாக நடனமாடினார். அபாரத்திறமை இந்த பெண் குழந்தைகளுக்கு. ஒவ்வொரு தாண்டவத்தையும் மிக விளக்கமாக கல்வெட்டுச் சான்றுகளுடன் விளக்கிய விதம் மிக அருமை. நடன ஆசிரியர்களின் அபார உழைப்பு இந்தக் குழந்தைகளின் நர்த்தனத்தில் பேரானந்தமாய் வெளிப்பட்டது. அரங்கத்தினர் கண்கள் பனிக்க, சிவபெருமானையும் பார்வதி தேவியையும் நிஜத்தில் தரிசித்த பரவச நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்றால் மிகையல்ல. கயிலை மலையானின் பேரருள் பெற்று வாழ்க வளமுடன்!

மகளிர் விழாவில் பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்த பதினோரு மகளிருக்கு சிவநேயப் பேரவையின் மதிப்புமிகுந்ததும் அவரவர் சாதனைகளுக்குப் பொருத்தமானதுமான பட்டங்களுடன் கூடியதுமான

*விருதினை வழங்கி கௌரவித்தனர். மிகுந்த ஆன்மீகச் சூழலில் சிவநேயர்களால் வழங்கப்பட்ட இந்த விருதினை சிவப் பிரசாதமாகவே கருதி பக்தியுடன் பெற்றுக்கொண்டனர் மகளிர்.*

*அத்தகைய மகத்தான சிவப்பிரசாதம் வேதபாரதியின் அங்கமாகவும், பெண் குழந்தைகளின் மீது அதீத அக்கறைகொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் டாக்டர்.ஷ்யாமா சுவாமிநாதனுக்கும் வழங்கப்பட்டது என்பதை வேதபாரதி தனது வாசகர்களுடன் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறது.* **“நெகிழ் கருணை மகிழ் மாமணி’** *என்கிறமிகப் பொருத்தமான பட்டயத்தைக் கொடுத்து கௌரவித்துள்ள சிவநேயப் பேரவை அமைப்பிற்கு வேதபாரதி தனது நன்றியைக் கூறிக் கொள்கிறது. நமது ஷ்யாமாவின் தொண்டு மேன்மேலும் தொடர்வதற்கு வேதபாரதி இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு வாசகர்கள் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.*

*ஆசிரியர்.*

## புண்ணியம் 1000

*அன்புடையீர் வணக்கம்,*

*நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடி வழிபட்ட பல கோவில்களின் நிலைமை, இன்று மகிழ்ச்சிக்குரியதாக இல்லை.*

*நம் அனைவரின் நன்மையினை மட்டுமே பூஜையில் பிரார்த்தித்து, இறைவனை மட்டுமே ஆதரவாகக் கொண்டு ஆனால் தமக்கென்று எந்த ஒரு ஆதரவும் இன்றி வாழும் அர்ச்சகர்களின் நிலைமையும் நமக்கு பெருமை தருவதாக இல்லை. இந்த நிலைமையினை மாற்றிட வேண்டியது நமது கடமை அல்லவா? இதற்கான சிறு முயற்கியே ‘புண்ணியம் 1000’ திட்டம். முதல் நிலையில் 10 கோவில்களில் நித்திய பூஜை, அர்ச்சகர்களுக்கு மாதாமாதம் ரூ.6000 வரை சம்பாவனை அளிப்பதே இதன் நோக்கம்.*

*தலைமுறை தலைமுறைக்கு புண்ணியம் அள்ளித் தரும் இந்த தெய்வீகக் கடமைக்கு உங்களிடம் குறைந்த பட்சம் எதிர்பார்ப்பது மாதம் ரூ.1000/- மாத்திரமே.*

Remittance : **AXIS BANK**
IFSC / RTGS Code : UTIB-000-0210
Name : Bharati Vidhyasram Trust - Blessings 1000
Account No.9210-1000-6022-830

*இறைபணியில்*
CATR Ramanathan,
Tirupur, Coordinator
Mobile : 9 6262 5555 9

# புரோஹிதர்
# “சமாதான மன்றம்”

*புரோகிதர்கள் பல ஆண்டு காலமாக தங்களது சேவையை அவர்களுக்கான கிராம மக்களுக்கு தொடர்ந்து செய்து வருகின்றனர். பரம்பரை பரம்பரையாக கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டைப் பற்றியும் அதன் உறுப்பினர்கள் பற்றியும் நன்றாக இவர்கள் அறிந்து வைத்துள்ளனர்.*

*ஒவ்வொரு வீடுகளிலும் அவ்வப்போது ஏதாவது கருத்து வேறுபாடுகளோ அல்லது பிரச்சனைகளோ வரும்போது, அது சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ எதுவாக இருந்தாலும் புரோகிதரிடம் முறையிடுகின்றனர். பொதுவாக பிராமணர்கள் மீது இருக்கும் மரியாதையும், நம்பிக்கையும் இதற்கு காரணமாக இருந்தாலும், பொது நலனையே தன் நலனாக கருதி செயல்படும் புரோஹிதர்களின் செயல்பாடுகள் கூடுதல் காரணங்களாகும்.*

*ஒவ்வொரு வீட்டைப் பற்றியும் அறிந்திருக்கும் புரோஹிதர்கள் தங்களிடம் வரும் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி எடுத்து வைக்கின்றனர். பிரச்சனைகளுக்கு சம்பந்தப்பட்டவர்களிடம், அவர்களது பெற்றோரின் பெருமைகள் பெற்றோர்கள் குழந்தைகளை வளர்ப்பதற்கு பட்ட சிரமங்கள், பெற்றோர்களின் கௌரவம் போன்ற விஷயங்களை எடுத்துச் சொல்கின்றனர். தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் சமாதானமாக செல்வதன் மூலம் கிராமத்திலும், சமுதாயத்திலும் தாங்கள் எப்படி கௌரவமாக நடத்தப்படுவீர்கள் மற்றும் தங்களது அடுத்த தலைமுறை அதாவது, குழந்தைகள் எப்படி முன்னுதாரணமாக தங்களை ஏற்கின்றனர், என்பனவற்றை எடுத்துச் சொல்லி சமாதானமாக செல்வதற்கு காரணமாகின்றனர்.*

*உதாரணமாக இரு சகோதரர்களுக்குள் பாகப்பிரிவினை சொத்து தகராறு வரும்போது, அவர்களது பொருளாதார நிலையை மனதில் கொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதற்கும், விட்டுக்கொடுப்பதன் பலன் என்ன என்பதன் விளக்கத்தையும் சொல்லி அங்கே சகோதரர்களின் உறவினை கட்டமைக்கின்றனர். சாதாரணமாக தனது தந்தைக்கு திவசம் கொடுக்கும்போது நான்கு சகோதரர்கள் தனித்தனியாக செய்ய முற்படுகின்றனர். காரணம் நால்வரின் மனைவியரிடம் ஒற்றுமை இல்லாதது. இந்த நிகழ்வில் நால்வரையும் புரோஹிதர் அழைத்து பேசுகிறார். “தாயார் இருக்கும்போது அவரது மனம்*

புண்படும்படி நடக்காதீர்கள். உங்கள் தந்தையாரின் பெருமை அறியாத மனைவியர்களின் ஆலோசனைகளை இந்த விஷயத்தில் ஒதுக்கி வையுங்கள்" என்று அறிவுரை கூறி மூத்த மகனின் இல்லத்திலோ அல்லது சௌகர்யமான வீட்டிலோ நால்வரும் சேர்ந்தே திவசம் செய்கிறார்கள். அதுவரை கருத்து வேறுபாடு காரணமாக ஒருவர் வீட்டிற்கு ஒருவர் வராத நிலையில், இந்த புரோஹிதரின் அறிவுரைகளை ஏற்று ஒரே இடத்தில் ஒன்றாக சேர்ந்து தங்களது தந்தைக்கான கர்மாவை செய்து தாயாரின் மனதிற்கு மகிழச்சியையும் தருகின்றனர்.

இதுபோன்றே, கிராமத்தில் பக்கத்து, பக்கத்து வீடுகளில் வசிப்பவர்களுக்கு இடையே ஏதாவது கருத்து வேறுபாடுகள் இருக்குமேயானால், அவர்களை அழைத்து பேசி. தர்மங்களை போதித்து வாழ்க்கை நெறிகளை போதித்து ஏற்றுக் கொள்ள செய்கிறார். பல நேரங்களில் அடுத்தடுத்த கிராமங்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகளைகூட தீர்த்து வைக்கின்றனர்.

உதாரணமாக ஒரு கிராமத்தின் ஏரிக்கு மழைநீர் வரவேண்டுமென்றால், அந்த கிராமத்தின் மேல் ஏதாவது மேற்கு பகுதியிலுள்ள கிராமங்களில் பொழியும் தண்ணீர் இந்த ஏரியை நோக்கி வருவதற்கு கால்வாய் இருக்கும். பல ஆண்டுகளாக மழை பொழிவு இல்லாத காரணத்தால் பராமரிப்பு செய்யாமல் தூர்ந்திருக்கும் கால்வாயை பக்கத்து கிராமத்தார் நிலமாக ஆக்கிரமிப்பு செய்திருப்பர். கால்வாய்க்கு சொந்தம் கொண்டாடும் கிராமத்தார் கேட்கும்போது" மழை இருந்தாலும் இல்லாவிட்டாலும் கால்வாயை பராமரிப்பு செய்யாதது உங்கள் தவறு எனவே, நாங்கள் கால்வாய்க்கு வழிவிடமாட்டோம் என்று அவர்கள் வாதம் செய்வார்கள்.

பெரும்பாலும் இந்த இரு கிராமத்திற்கான புரோஹிதர் ஒருவராகவே இருப்பார். அப்படி இருந்தால், ஊர் தலைவரிடமோ, பெரியோர்களிடமோ நீர் ஆதாரத்திற்கான கால்வாயை விட்டுக்கொடுக்கும் படியும், தானிய வளர்ச்சிக்கும், பல ஜீவராசிகளுக்கும் ஆதாரமான தண்ணீருக்கு தடையாக இருக்க வேண்டாம் என்று எடுத்துரைத்து பிரச்னையை தீர்த்து வைப்பார்.

இவ்வாறு தனது வைதீக காரியங்களைத் தாண்டி சமுதாய நலனில் அக்கறை கொண்டு பல தீர்வுகள் ஏற்பட காரணமாக இருக்கும் புரோஹிதர்கள் ஒரு சமாதான மன்றமாக திகழ்கின்றனர்.

**- ஆதிரையன்**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில்
# கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்திற்கோ / அலுவலகத்திற்கோ வந்தடையும்.

CUB

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், எளியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி,
திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோவில் வீதி, குமார் பிள்ளையார்
கோவில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், பங்களா ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

If not delivered please return to

**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.